VISIT…

"இது வெறும் புல்தானோ, லில்லி இல்லையோ என்று வெகு நாட்களாகப் பயம் காட்டிய என் வீட்டுச் செடி இன்று பூத்திருக்கிறது. இது செடியின் முதல் பூ. இந்தப் பூவோடு சேர்த்து என் சந்தோஷமும் பூத்திருக்கிறது. வாள் வாளாக நீண்டிருக்கிற பச்சைக்கு நடுவில் மென்மையான நீலமாக அது மலர்ந்திருக்கிறது. இந்தச் செடியை நடும் போது அது பூக்கும் என்ற நம்பிக்கையையும் சேர்த்து நட்டேன். உற்சாகமாய்த் தண்ணீர் ஊற்றி வந்தேன். இன்றைக்கு சந்தோஷம் பூவாய் பூத்திருக்கிறது.

இந்த நம்பிக்கையையும் உற்சாகமும் சந்தோஷமும்தான் மனிதர்களையும் பூக்க வைக்கிற விஷயம் என்று புரிகிறது. எண்ணற்ற பத்திரிகைகள் மண்டியிருக்கிற இந்த நேரத்தில் திசைகள் இவற்றுக்குத்தான் நாற்றுப்பாவ ஆசைப்படுகிறது இது இருபத்தி இரண்டு வருடங்களுக்கு முன்னால், திசைகள் என்ற இளைஞர்கள் பத்திரிகைக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது எழுதிய வரிகள். இத்தனை காலத்திற்குப் பின் அந்தத் திசைகளைத் திரும்பிப் பார்க்கும் போது, நான் பாவிய நாற்றுக்கள் விளைந்து செழித்திருப்பதைக் காணமுடிகிறது.

நான் மட்டுமல்ல, பலர் இன்னும் அந்தத் திசைகளை நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறார்கள். நண்பர் சுஜாதா, கடந்த டிசம்பரில் (29. 12. 02) ஆனந்த விகடனில் எழுதுகிறார்ः . . . ." இளைஞர்களை முன்னணியாக வைத்து ' திசைகள்' பத்திரிகையை சாவி தொடங்கினார். தற்போது பிரபலமாக இருக்கும் பல எழுத்தாளர்களும், சித்திரக்காரர்களுக்கும், ஏன் சினிமா டைரக்டர்கள்

கூட 'திசைகள்' பள்ளியில் வந்தவர்கள். அதன் ஆசிரியர் மாலன் முதல் இதழிலிருந்தே விஞ்ஞானக் கதைகள் எழுதக் கேட்டுக் கொண்டார். திமலாவில் தொடங்கி பத்துக் கதைகள் எழுதினேன்..... இப்படியே 50 கதைகள் எழுதிவிட்டேன். பிரமிப்பாக இருக்கிறது. இவற்றைத் தொகுப்பாகப் பார்க்கும் போது ஒரு முன்னோடியின் திருப்தி ஏற்படுகிறது "
புதிய இலக்கிய வடிவங்கள், நவீன ஓவியங்கள், அதுவரை தமிழில் அறியப்படாத இதழியல் உத்திகள், புதிய திறமைகள் இவற்றிற்கெல்லாம் அந்தத் திசைகள் ஒரு விளைகளனாக இருந்தது. வடிவங்களும் வார்த்தைகளும் என்னவாக இருந்தாலும் அதன் அடி நாதமாக நம்பிக்கையும், உற்சாகமும் தருவதே அதன் நோக்கமாக இருந்தது.

இப்போது அந்த லட்சியங்கள் மீண்டும் தேவைப்படுகின்றன. ஆக்க பூர்வமாக வாழ்க்கையை, எழுத்தை, மனிதர்களைப் பார்க்கிற நோக்கு நம் எல்லோருக்குமே இன்று தேவைப்படுகிறது. இன்று மனிதர்கள் சக மனிதர்களை சந்தேகத்தோடு பார்க்கிறார்கள். அறிவியலை அச்சத்தோடு அணுகுகிறார்கள். இலக்கியத்தைக் கசப்பை உமிழ்வதற்கான ஒரு கருவியாக, அல்லது அகந்தையின் பிரகடனமாகப் பயன்படுத்துகிறார்கள்.. தமிழர்கள் தங்களது தாய்மொழியின் எதிர்காலத்தைக் கவலையோடு பார்க்கிறார்கள்.

ஐம்பதாண்டுகளில் தமிழ் அழிந்து விடும் என்ற அச்சம், தமிழகத்தில் தமிழ்க் கல்விக்கு எதிராக வழக்கு, மலேசியாவில் தமிழ்ப் பள்ளிகளை மூடிவிடலாமா என்ற விவாதம், சிங்கையில் பள்ளிகளில் தமிழ்த் தேர்வு தேவையா என்கிற பட்டிமன்றங்கள், இளையோரிடம்

தமிழ் குறித்து எழுட்சி இல்லையே என்று எல்லாப் பக்கங்களிலும் ஏக்கம், இத்தனையும் இருந்து வரும் இந்த நாட்களில்தான் தமிழ் உலகம் முழுதும் பரந்து கிடக்கும் ஒரு மொழியாகத் திகழ்கிறது ; இணையத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் ஆங்கிலமல்லாத மொழியாக விளங்குகிறது ; தமிழ் நாட்டில் கோடிக்கணக்கான ரூபாய்களுக்குப் புத்தக வியாபாரம் நடக்கிறது ; எழுத்தாளர்கள் பாரதியைப் போல், புதுமைப்பித்தனைப் போல் வறுமையில்தான் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலை மாறிவருகிறது.

நமக்குத் தேவை நம்பிக்கை. நாம் தனித்துப் போய், ஒற்றை மரத் தோப்பாக இல்லை என்பதை ஏற்றுக் கொள்கிற மனம். உலகம் முழுதும் பரவிக் கிடக்கிற நாம் ஒன்று சேர்ந்தால், ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டால், நம் தாய் மொழி தழைக்கும் என்ற ஊக்கம்.

வேர்களைத் தேடி

மாலன்

கடலோரக் கிராமங்களின் கதை

அந்த ஆழிப் பேரலையை யார்தான் மறந்திருக்க முடியும்?
கடலில் நிமிடம் தோறும் எத்தனையோ அலைகள் எழுகின்றன. கரையை நோக்கி விரைகின்றன. கரையில் காலிறங்க முயன்று கடைசி நிமிடத்தில் மனம் மாறிப் பின் வாங்கி மறைகின்றன. ஆனால் அந்த அலைமட்டும் அநேகமாக

எல்லோருடைய நினைவிலும் தங்கி விட்டன. சுனாமியின் தாக்குதலுக்கு உள்ளான கிராமங்கள் சிலவற்றிற்கு, சுனாமி தாக்கியதின் பின் சரியாக ஒரு வருடம் ஒரு மாதம் கழித்து - அதாவது ஜனவரி 26ம் தேதியன்று – செல்ல நேர்ந்தது. தரங்கம்பாடி தாண்டி, காரைக்கால் துவங்குவதற்கு முன், தமிழ்நாட்டின் விளிம்பில் இருக்கிறது சந்திரப்பாடி. பிரதான சாலையிலிருந்து சற்று உள்ளடங்கிய, கடலோரக் கிராமம். நான் போயிருந்த அந்த மதியப் பொழுதில் கடற்கரையில், 30-40 படகுகள் நின்றிருந்தன. அநேகமாக அவை எல்லாமே இயந்திரம் பொருத்தப்பட்ட விசைப்படகுகள். ஒரு படகின் அருகில் சிலர் கூடி நின்று புதிய மோட்டார் ஒன்றைப் பொருத்திக் கொண்டிருந்தனர். சில நிமிடங்கள் மல்லுக் கட்டிய பிறகு மோட்டார் உறுமிக் கொண்டு ஓடத் துவங்கியது. வெள்ளோட்டம் பார்க்கப் படகைக் கடலில் இறக்கினர். 'வர்றீங்களா?' என வாஞ்சையுடன் கேட்டு, என்னையும் படகில் ஏற்றிக் கொண்டனர்.

அலைகள் அன்று உற்சாகமாக இருந்தன. படகுகள் உயரத் துள்ளி எழும்பின. சீறி வரும் ஜல்லிக் கட்டுக் காளையின் திமிலை கட்டிக் கொண்டு அதனை அடக்க முற்படுபவர்களைப் போல, துள்ளிக் கொண்டிருந்த படகின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு ஒருவர் உள்ளே ஏற முயன்று கொண்டிருந்தார். அவரும் ஏறிக் கொண்டபிறகு பேச்சுத் தொடங்கியது.
"மோட்டார் புதுசா?"
"இன்னிக்குக் காலைலதான் வாங்கிட்டு வந்தோம். சும்மா தண்ணி மாதிரிப் போகுது பாருங்க"
சாய்தளத்தில் ஓடுகிற தண்ணீர் போல படகு கடலில் விரைந்து

நழுவுகிறது என்று சொல்கிறார் என்று புரிந்தது.

" ஏன் போவாது? சும்மாவா? நாற்பதாயிரம் ரூவா?"

பணம் போட்டவர் சொல்ல நான் அவரைப் பார்த்துப் புன்னகைத்தேன்.

கடலுக்குள் ஒரு இரண்டு கிலோமீட்டர் தூரம் போனபின் படகை நிறுத்திவிட்டார்கள். படகு அங்கேயே கொஞ்ச நேரம் மிதந்து கொண்டு நின்றிருந்தது. படகு நின்றதும் பேச்சுத் துவங்கியது

" கரையில இத்தனை படகிருக்கே, வேலைக்குப் போகலையா?"

" அதை ஏன் சார் கேட்கிற?"

" என்ன?"

" ரவையிலே (இரவில்) போனவங்க வந்துட்டாங்க. சிலர் பேர் போகலை"

" முப்பது போட்டுக்கு மேலிருக்கும் போலிருக்கே?"

" சுனாமிக்கு முன்னால இந்த கிராமத்தில் இருபது முப்பது போட்டுத்தான் இருந்திச்சு. இப்போது மூணு பங்கு ஜாஸ்தி"

" எல்லோருக்கும் மீன் கிடைக்கிறதா?"

" சில நாள் பூராவும் காத்திருந்தால் பத்து ரூபாய்க்குக் கூட கிடைக்காது. சில நாள் மூவாயிரம் நாலாயிரத்திற்குக் கிடைக்கும்"

ஆபத்தான தொழில். நிச்சியமற்ற வருமானம். அதிகரித்து வரும் போட்டி.

" அப்படியிருக்க ஏன் இத்தனை செலவு பண்ணி இந்தத் தொழிலைச் செய்துகிட்டிருங்கீங்க. இந்த நாப்பதாயிரத்தை வச்சுக் கரையிலேயே கடை ஏதாவது போட்டிருக்கலாமில?"

என் யோசனை அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது அவர்கள் முகத்தில் தெரிந்தது. அவர்கள் இதற்கு யார் பதில் சொல்வது

என்பதைப் போல தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுள் இளைஞராக இருந்த ஒருவர், " எங்களுக்கு வேற தெரியாதில்ல?" என்றார்.

ஒரு நடு வயதுக்காரர் விளக்க ஆரம்பித்தார்: " ஐயா, கடல் எங்களுக்கு அம்மா மாதிரி. இத்தினி வருசமும் அவதான் சோறு போட்டிட்டிருக்கா. அன்னிக்கு ஏதோ அவளுக்குக் கடுங் கோபம். அடிச்சிட்டா. அதற்காக அவளை விடுப் போயிட முடியுமா?"

எனக்கு சிலிர்த்தது. சில நிமிடங்களுக்கு முன்னால்தான் அவர் சுனாமியில் தனது ஒரு வயதுப் பெண் குழந்தையைப் பறி கொடுத்த சோகத்தைச் சொல்லியிருந்தார். " கெட்டிக்காரப் பொண்ணு. சுட்டி! . இப்பிடிங்கிறதுக்குள்ள போயிடுச்சு" என்று சொடக்குப் போட்டுக் கொண்டு அவர் சொன்னபோது அவர் குரல் உடைந்து தழுதழுத்திருந்தது.

மகள் மீதிருந்த பாசத்தைப் போலவே அவருக்குக் கடல் மீதும் பாசம். அப்படியொரு இழப்பிற்குப் பின்னும் கடல் மீதிருக்கும் அவரது நம்பிக்கை வற்றிவிடவில்லை. மனம் கசந்து விடவில்லை.

நம்பிக்கையின் வேறு சில கீற்றுக்களும் அந்த கிராமத்தில் தெரிந்தன. ஊருக்குள் நுழையும் இடத்தில் ஒரு ஊராட்சிப் பள்ளி இருக்கிறது. சரக்குப் பெட்டகங்களாக -கன்டெயினர்- பயன்படுத்தப்பட்டு வந்த பிரம்மாண்டமான பெட்டிகளை சுனாமிக்குப் பின் சிலகாலம் தங்குமிடமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இப்போது அந்தப் பெட்டிகளைக் காலி செய்து

விட்டு, மீண்டும் கடற்கரைக்கே திரும்பி விட்டார்கள். (அந்தப் பெட்டகங்களில் மனிதர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று நினைத்தால் மலைப்பாக இருக்கிறது. 12 அடி நீளமும், ஆறடி அகலமும் கொண்ட அந்த இரும்புப் பெட்டிகளில் ஜன்னல் எதுவும் கிடையாது. தளமும் இரும்புத் தளம். சில நிமிடங்களிலேயே காந்தத் தொடங்கிவிடுகிறது.) அந்தப் பெட்டகங்கள் ஒன்றில் இப்போது ஒரு கணினி மையம் தோன்றியிருக்கிறது. ஒரு நீண்ட மேசை மீது நான்கு கணினிகள். அவற்றைப் பயன்படுத்துபவர்கள் குழந்தைகள்! ஆசான் என்ற ஒரு மென் பொருளைப் பயன்படுத்துகிறார்கள். அதைப் பயன்படுத்த ஆங்கில அறிவு தேவை இல்லை. தமிழின் மூலமே உள்ளீடு செய்ய முடியும்.

பத்தாம் வகுப்புப் படிக்கும் மாணவர் ஒருவர்தான் இந்தக் குழந்தைகளுக்கு 'வாத்தியார்'. சந்தேகங்களை அவரிடம்தான் வந்து குழந்தைகள் 'அது எப்படி அண்ணே?' என்று கேட்டுத் தெரிந்து கொள்கிறார்கள். அவரும் செல்லமாகத் தலையில் தட்டி, சலித்துக் கொள்ளாமல் சொல்லிக் கொடுக்கிறார். பொதுத் தேர்வு வருகிறது படிக்க வாடா என்று அவரை அவரது சகாக்கள் அழைக்கிறார்கள். "நீங்க போங்க வந்திற்ரேன்" என்று இருந்த இடத்திலிருந்தே அவர்களை திரும்பிக் கூடப் பார்க்காமல் அனுப்பிவிட்டு கணினியின் முன் பழியாய் கிடக்கிறார். அவரிடம் பயிற்சி பெற்ற ஒரு ஒன்பது வயதுக் குழந்தை அவரச அவசரமாக இந்திய தேசியக் கொடி ஒன்றைக் கணினித் திரையில் வரைந்து விட்டு என்னைப் பார்க்க இழுத்துச் செல்கிறது. மௌஸ் இன்னும் கைக்கு முழுமையாக வசப்படாததால், மெழுகப்பட்ட வண்ணங்கள் கட்டத்தின் விளிம்பிற்கு வெலியேயும் தீற்றலாகத் துருத்திக் கொண்டு

நிற்கின்றன.

ஆனாலும் அந்தக் கொடி எனக்கு அழகாகவே தோன்றுகிறது. வெளியே பள்ளி மைதானத்தில், குடியரசு தினத்தை முன்னிட்டுத் தோரணமாகக் கட்டப்பட்டிருக்கும் காகிதக் கொடிகளை விட, இந்தக் கணிணிக் கொடி அழகாகத்தான் இருக்கிறது. இந்தக் கணினிக் கொடிக்குப் பின்னால் தன்னால் முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. கிராமத்திற்கு வந்து விட்ட தொழில் நுட்பம், மொழி என்ற தடையை உடைத்துக் கொண்டு, எதிர்காலத்தின் கையில் சேர்ந்து விட்டது என்ற ஆறுதல் இருக்கிறது. நகர்ப்புறங்களில் வசிப்பவர்களின் வீடுகளில் கூட, கணினியின் அருகில் செல்லும் குழ்ந்தைகள், " ஏய், அதைத் தொடாத!" என்ற மிரட்டலை சந்திக்கும் காலத்தில் கிராமக் குழந்தைகள் சற்றும் தயக்கமின்றி அதில் விளையாடுவது மனதிற்கு நிறைவளிக்கிறது. பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் பாடப் புத்தகத்திற்கு வெளியே வேறெதிலும் கவனம் செலுத்தக்கூடாது என்று நிர்பந்திக்கப்படும் காலத்தில், ஒரு பத்தாம் வகுப்பு மாணவர், ஜனவரிக் கடைசி நாள்களில் கணினிக் குழந்தைகளோடு நேரம் செலவழிப்பதைக் காண மகிழ்ச்சி எழுகிறது.
அந்த மகிழ்ச்சி நாகப்பட்டினம் மாவட்டத்தின் மற்றொரு முனை நோக்கிப் போகத் துவங்கியதும் வாடத் துவங்கியது. வேளாங்கண்ணியிலிருந்து திருத்துறைப்பூண்டி போகும் திசையில் சாலையின் இரு மருங்கிலும் விரிந்து பரந்து கிடக்கும் வயல்வெளிகளைப் பார்க்கலாம். காலருகில் வந்து தழுவிச் செல்கிற அலையைப் போல, சாலைக்கு மிக நெருக்கமாக, சாலையை ஒட்டி அந்த வயல் வெளிகள் அமைந்திருக்கின்றன. நான் போனது

பொங்கலுக்குப் பிறகு. அநேக நிலங்களில் அறுவடை முடிந்திருக்க வேண்டும். ஆனால் பொன்னிறத்தில் சாய்ந்து கிடந்த பயிர்களைத்தான் பார்க்க முடிந்தது. முற்றி விளைந்த கதிர்கள் அல்ல. நெல் கதிர் பிடிக்காமல் சாவியாகக் கிடந்தன. புகையான் என்ற பூச்சித் தாக்குதலுக்குப் பயிர்கள் ஆளாகி விட்டன என்று பின்னால் ஒரு வேளாண்துறை அதிகாரியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அந்த வைக்கோலைக் கூடப் பயன்படுத்த முடியாது என்று அவர் சொன்னார். கடந்த நான்காண்டுகளாக பல்வேறு துன்பங்களுக்காளாகி, பயிர் செய்ய முடியாதிருந்த விவசாயிகள், கடன் வாங்கி இந்த ஆண்டு பயிர் செய்ததாகவும், அதையும் புகையான் கொண்டு போய்விட்டதாகவும் சொன்னார்கள். விளைந்து சாவியானப் பயிரை அறுக்கக் கூலி கொடுக்க முடியாத நிலையில் வெறுத்துப் போய் விவசாயிகள் பலர் அந்தப் பயிரை அப்படியே வயலில் விட்டு வைத்திருந்தனர்.

இந்தப் பகுதியில் காமேஸ்வரம் என்ற ஓர் சிறு கிராமத்திற்குப் போயிருந்தேன். இது மீன் பிடித் தொழிலை அல்ல, விவசாயத்தைப் பெரிதும் நம்பியிருக்கிறது. ஊராட்சித் தலைவரின் முயற்சியால் ஊருக்குள் புதிதாய் சாலைகள் வந்திருக்கின்றன. ஊராட்சித் தலைவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் ஊருக்குள் அவரது கொடியைக் காணோம். திமுக, அதிமுக, விஜயகாந்த் கட்சி ஆகியவற்றின் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

காமேஸ்வரம் கிராமத்திற்கு ஒரு பிரசினை. கடலோரத்தில் தோண்டினால் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. ஊருக்குள் தோண்டினால் உப்புத் தண்ணீர். இந்தப் பிரசினையை எப்படி

தீர்க்கலாம் என்று கிராமத்து மக்களிடம் கலந்து பேசினேன். ஊரில் இருந்த முதியவர் ஒருவர் சொன்னது யோசிக்க வைத்தது." ஊருக்கு வெளியே கீரனூர் ஏரி என்று ஒன்று இருந்தது. அதில் தண்ணீர் இருந்தவரை ஊர் தண்ணீர் நன்றாக இருந்தது. எங்கள் ஊருக்கு மட்டுமல்ல, பக்கத்து கிராமத்திற்கும் கூட நாங்கள் தண்ணீர் கொடுத்து வந்தோம். அந்த ஏரி வறண்டதிலிருந்து ஊர்த் தண்ணீர் கெட்டுப் போச்சு" என்றார். அந்த ஏரியைப் போய்ப் பார்த்தேன். சுமார் ஐந்து ஏக்கர் பரப்பில் விரிந்து கிடந்த அந்த ஏரியின் பெரும்பகுதியில் தூர் படிந்து கிடந்தது. ஏரியில் தண்ணிர் வற்றுகிற காலத்தில் அதற்குத் தண்ணீர் தர காவிரியில் ஒரு பம்ப் ஹவுஸ் இருந்தது.

அறைக்குத் திரும்பி தண்ணீர் குடிக்கும் போதெல்லாம் ஓர் உறுத்தல் இருந்தது. ஊருக்குப் பயன்பட்டுக் கொண்டிருந்த ஓர் ஏரி இப்படிப் பாழ்பட்டுப் போனதற்கு யார் காரணம் ஊரின் அலட்சியமா? மெத்தனமா, அரசாங்கத்தின் புறக்கணிகப்பா என்ற ஆரம்பக் கேள்விகளைத் தாண்டி இதற்கு ஏதேனும் செய்ய முடியுமா என்ற கேள்வி மனதை மொய்த்தது .பேரறிவாளனின் செல்வம் என்பது ஊருணி நீர் நிறைந்ததைப் போல என்று வள்ளுவர் சொல்லிப் போயிருந்தது மனதில் வந்து போனது. ஏதாவது செய்து பிரசினையை சீர் செய்து விட முடியும் என்ற நம்பிக்கையோடு தூங்கப்போனேன்.

மறுநாள் காலை நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். ராதாகிருஷ்ணனை சந்தித்து, அவர் குடியரசு தினத்தன்று அந்த கிராமத்திற்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். குடியரசு தினத்தன்று ஒவ்வொரு கிராமத்திலும் கிராமசபைக் கூட்டம்

நடத்தப்பட வேண்டும் என்பது அரசு ஆணை. கிராமசபை என்பது கிராமத்துக் குடி மக்கள் அனைவரும் பங்கேற்கும் கூட்டம். இந்த கிராமசபைகளில் ஒரு மரபு பின்பற்றப்படுகிறது. கிரமசபையில் பங்கேற்பவர்கள் அனைவரும் தரையில்தான் அமர வேண்டும். யாருக்கும் நாற்காலி கிடையாது. மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தால் கூட நாற்காலி கிடையாது.

கிராமங்களை மேம்படுத்தும் நோக்குடைய நான் பணியாற்றும் அமைப்பின் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட 17 கிராமங்களுக்கான திட்டம் ஒன்றைத் தயாரித்திருந்தோம். இந்தியாவில் கிராமங்கள் வளர்ச்சி காணாததற்குத் திட்டங்கள் மக்களைக் கலந்தாலோசித்து உருவாக்கப்படவில்லை, தில்லியிலோ, சென்னையிலோ தயாரிக்கப்பட்டு அவை கிராமங்கள் மீது திணிக்கப்பட்டன என்பது ஒரு முக்கியக் காரணம் என்பது என் கருத்து. அதனால் நான் கடந்த சில ஆண்டுகளாக கிராமங்களுக்குச் சென்று மக்களோடு கலந்தாலோசித்துத் திட்டங்கள் தயாரித்துத் தந்து வருகிறேன். அத்தத் திட்டங்கள் இது போன்ற கிராமசபைகளில் வைக்கப்பட்டு மக்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பின் அரசிற்குக் கொடுக்கப்படும். இந்த ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட 17 பஞ்சாயத்துக்களை எடுத்துக் கொண்டிருந்தேன். அதில் இந்த காமேஸ்வரமும் ஒன்று.

காமேஸ்வரம் கிராம சபைக் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் வந்தார். அவர் உரை ஆற்றி முடித்த பின்பு என்னைப் பேச அழைத்தார்கள். நான் மிகச் சுருக்கமாகப் பேசினேன். கீரனூர் ஏரி பற்றிக் குறிப்பிட்டு, அதைத் தூர் வாரி ஐந்து அல்லது ஆறடி

ஆழத்திற்குத் தண்ணீர் தேக்கித் தர வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் கேட்டேன். அதற்கு அங்கேயே ஒப்புதல் கிடைத்தது. ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மக்களுக்கு பெரும் உற்சாகம். திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பது என் நம்பிக்கை. ஏனெனில் ஊரக வேலை வாய்ப்புத் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டத்தில் இது பட்டியலிடப்பட்டுள்ளது. திட்டத்தை நிறைவேற்றாவிட்டால் மக்கள் வழக்குப் போடலாம். நான் கூட்டத்தை விட்டு வெளியே வந்த போது பலர் என்னைச் சூழ்ந்து கொண்டு கையை பற்றிக் கொண்டு தழுதழுத்த குரலில் நன்றி சொன்னார்கள்.

எனக்குள் மகிழ்ச்சியை விட நெகிழ்சியே மேலோங்கியிருந்தது. முழுநேரப் பத்திரிகையாளனாக இருந்த நாள்களில் இது போன்ற பனிகள் ஆற்ற வாய்ப்பிருந்ததில்லை. குமுதம்ஆசிரியராக இருந்த காலத்தில் ஒரு ஏழை மாணவன் பொறியற்கல்லூரியில் படிக்க வாசகர்கள் ஆதரவைத் திரட்டி உதவி செய்ய முடிந்தது ஒரு விதிவிலக்கு. (அந்தப் பையன் நந்தகோபால் இன்று ஒரு பொறியாளராக ஒரு கல்லூரியில் பல மாணவர்களைப் படிப்பித்துக் கொண்டிருக்கிறான்.)
அவன் பட்டமளிப்பு விழாவிலிருந்து நேரே என்னைப் பார்க்க வந்த போது விவரிக்க முடியாத ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது. அதைப் போன்ற ஒரு நெகிழ்ச்சி இப்போதும்.

காரில் ஏறித் திரும்பும் போது என் காலில் ஏதோ இடறிற்று. அது நான் சென்னையிலிருந்து கொண்டு போயிருந்த தண்ணீர் பாட்டில்.

இளமையில் கல்

குமரன்

எல்லோருக்கும் தெரியும் இரண்டுவித இந்தியா இருக்கின்றதென்று. அந்த இரண்டு இந்தியாவிற்கும் உள்ள இடைவெளி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. ஒரு இந்தியாவில் நல்ல கல்வி கிடைக்கிறது; எல்லா வித வசதிகளும் கிடைக்கின்றன; வாழ்க்கை பொருளாதார ரீதியாகவும் சமுதாய வாழ்வு ரீதியாகவும் நன்றாய் அமையும் என்ற நம்பிககை எளிதில் கிடைக்கிறது. மற்ற இந்தியாவிலோ இதற்கு எதிர்ப் பதமாக இருக்கும் நிலையே உள்ளது. இந்த மாதிரி சமுதாய ஏற்றத்தாழ்வு நம் நாட்டில் மட்டுமன்றி உலகில் எங்கு நோக்கினும் இருக்கிறது. ஒரே வித்தியாசம். நம் நாட்டில் இந்த இரண்டு இந்தியாவிற்கும் உள்ள இடைவெளி மற்ற நாடுகளைக் காட்டிலும் மிக மிக அதிகமாக இருக்கிறது என்பது என் கருத்து.

இந்த இடைவெளி குறைவாய் இருக்கும் நாடுகளே உலகில் வளர்ந்த நாடுகளாய் இருக்கின்றன. வளர்ந்த நாடுகள் என்றவுடனே நினைவிற்கு வரும் அமெரிக்காவிலும் நம் நாட்டில் இருக்கும் எல்லாவித தீமைகளும் இருக்கின்றன. ஆனால் கஷ்டப்படும் அமெரிக்காவிற்கும் வாழ்வாங்கு வாழும் அமெரிக்காவிற்கும் இருக்கும் இடைவெளி நம் நாட்டளவு இல்லை. அதனால் சிறிது முயற்சி செய்தாலே போதும் கஷ்டப்படும் அமெரிக்காவில் வாழும் ஒருவன் நன்றாய் வாழும் அமெரிக்காவில் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பெற்று முன்னேறிவிட முடியும். நம் நாட்டிலோ

அப்படி இல்லை. வாய்ப்புகள் எல்லாமே வாழும் இந்தியாவின் குடிமகனுக்குத் தான் கிடைக்கின்றன. தாழும் இந்தியாவின் குடிமகனுக்கு அவ்வித வாய்ப்புகள் இருப்பதே தெரியாத அறியாமை நிலை தான் இருக்கிறது. அப்படியே அவனுக்கு இந்த வாய்ப்புக்களைப் பற்றித் தெரிந்தாலும் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அவனால் அந்த வாய்ப்புகளை எட்டிப் பிடிக்க முடியவில்லை. அதற்குப் பலவித காரணங்கள் - அவர்கள் வாழும் சமுதாயச் சூழல் அதில் முக்கியப் பங்காற்றுகிறது. இது ஒரு சிறையில் அடைபட்ட உணர்வினையும் நம்பிக்கை இழப்பையும் அந்த தனி மனிதனுக்கு ஏற்படுத்துகிறது. சமுதாயச் சூழலினால் அடிப்படைக் கல்வியும் பெற முடியாது தன் சமுதாயச் சூழலைப் போலவே அன்றாடங்காய்ச்சியாகவோ அடிமைத் தொழில் செய்பவனாகவோ அவன் மாற வேண்டியிருக்கிறது.

கல்வியும் நிலையானப் பொருளாதாரச் சூழ்நிலையும் ஒருவனை இந்தச் சிறையிலிருந்து விடுதலை செய்து விடும். ஆனால் உண்மையில் நடப்பது என்ன? சமுதாயச் சூழலினால் அவனுக்குத் தேவையான கல்வி கிடைப்பதில்லை. கல்வி கிடைக்காததால் அவனால் அந்தச் சமுதாயச் சூழலில் இருந்து விடுபட முடிவதில்லை. இது ஒரு சக்கரச் சுழற்சியைப் போன்று ஒன்றிலிருந்து ஒன்று தோன்றி முடிவே இல்லாமல் செல்கின்றது.

பரம்பரை பரம்பரையாய் தான் இப்படிக் கஷ்டப்படும் போது இன்னொரு இந்தியாவில் வாழுபவர்கள் பரம்பரை பரம்பரையாய் நன்றாய் வாழ்வதைக் கண்டு அவனுடைய நம்பிக்கை நசுக்கப்படுகிறது. உரிமை கிடைக்காத போது அதனைத் தட்டிப்

பறிக்கத் தொடங்குகிறான். அந்த உரிமைகளைக் கொடுக்க இன்னும் தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்ளாத இந்தியா தட்டிப் பறிக்கும் அவன் செயலைக் குற்றம் என்று சொல்லி சட்டரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் தண்டிக்கிறது.

எதிர்மறையான இந்த வழிமுறையை விட்டால் வேறு வழியில்லையா நம் நாட்டை முன்னேற்ற?

உண்டு. நிச்சயம் உண்டு. இந்த இந்தியச் தேசம் தந்த வசதிகளை எல்லாம் பெற்று அதனால் ஒரு நல்ல நிலைக்கு வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர் சமுதாயம் நினைத்தால் இது நிகழும். அவர்கள் மனது வைத்து 'நாம் பெற்ற இந்த வசதிகள் ஒரு ஏழைச் சிறுவனும் பெற வேண்டும்' என்று எண்ணி அதற்குரிய வழிகளில் ஈடுபடத் தொடங்கினால் இது நிகழும். ஏன் இளைஞர் சமுதாயம் என்கிறேன் என்று கேட்டீர்களானால், வயது ஏற ஏற எதிர்மறையான அனுபவங்களைப் பெற்று, இது நடக்காது என்ற ஒரு அவநம்பிக்கையும், அவன் என்னை அன்று அப்படிச் செய்தான், அவனுக்கு நான் ஏன் உதவவேண்டும் என்ற அடாவடி எண்ணங்களும் நிரம்பி விடுகின்றன. இளைய சமுதாயத்திடம் அந்த விதமான கசப்பு எண்ணங்கள் இல்லை. அதனால் அவர்களை சிறிது தூண்டிவிட்டால் இத்தகைய நல்ல செயல்களில் எளிதாக ஈடுபடுத்த முடியும்.

அதனால் தானோ என்னவோ நம் குடியரசுத் தலைவரும் பெரியவர்களிடம் அதிகம் பேசாமல் பள்ளிக் குழந்தைகளிடமும் இளைய சமுதாயத்திடமும் அதிகம் பேசுகிறார். அவர்களிடம்

நம்பிக்கை எனும் நெருப்பை மூட்டுகிறார். எல்லோருக்கும் அக்கினிச் சிறகுகள் தந்து உதவுகிறார். இந்த எதிர்மறையில்லாத நேர்மறையான செயல்பாட்டில் ஈடுபட நினைக்கும் மூத்தவர்களும் இதனையே செய்ய வேண்டும்.

இன்றைய இளைய தலைமுறைக்கு பொழுது போக்குகள் என்ற பெயரில் நஞ்சினை ஊட்டும் திசைத் திருப்பல்கள் மிக அதிகமாகிவிட்டன. மற்றவர்க்கு உதவி செய்யும் நல்ல உள்ளம் அவர்களுக்கு இருந்தாலும் அதனை நல்ல முறையாகச் செயல்படுத்த அவர்களுக்கு ஒரு வழிகாட்டி தேவையாய் இருக்கிறது. நல்லவை செய்யும் வாய்ப்புகள் இல்லாத வெற்றிடத்தில் இந்த திசைத் திருப்பும் தீய பொழுது போக்குகள் எளிதில் இடம்பிடித்து விடுகின்றன.

இந்த இளையத் தலைமுறைக்கு அவர்களுக்குள்ளே இருக்கும் உதவ வேண்டும் என்ற எண்ணத்தை நன்றாக ஊக்கப்படுத்தும்போது அவர்களும் வேறு சிலரை நல்ல நிலைக்குக் கொண்டுவர முயலுவான். அப்படிக் கைத்தூக்கி விடப்பட்டவர்களும் தாங்கள் ஒரு நல்ல நிலைக்கு வந்த பின் தான் இருந்த நிலையில் இருப்பவர்களுக்கு உதவ முன்வருவார்கள். அப்படி ஒவ்வொருவராக நடக்கும் செயல் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு என்று தொற்றி ஒரு பெரும் இயக்கமாய் வளர்ந்து நம் நாடு முன்னேற்றப் பாதையில் விரைவில் நடக்க வழிவகுக்கும்.

என்ன, இதெல்லாம் எழுதுவதற்கும் கேட்பதற்கும் பேசுவதற்கும் நன்றாய் இருக்கிறது; நடைமுறையில் சாத்தியம் இல்லை என்று

தோன்றுகிறதா? இருக்கலாம். நடைமுறையில் சாத்தியமின்றி இருக்கலாம். இந்தத் திசையில் எந்த வித முயற்சியும் எடுக்காமல் தொடக்கத்திலேயே நடைமுறைச் சாத்தியமில்லை என்று சொல்லாமல் சற்றே முயன்று பார்ப்போம் என்று சில இளைஞர்களால் தொடங்கப்பட்டதே 'இந்தியக் கனவு 2020' http://www.dreamindia2020.org/ என்ற இயக்கம்.

ஆமாம். அது தொடங்கும் போது சின்னதாகத் தான் இருந்தது. தொடங்கி ஒரு வருடம் தான் ஆகிறது. ஆனால் அது ஆங்கொரு பொந்திடை வைத்த அக்கினிக் குஞ்சு போல் காட்டினை வெந்து தணிக்க ஒரு இயக்கமாய்ப் புறப்பட்டு விட்டது. மும்பையில் மூன்று தமிழ் இளைஞர்களால் தொடங்கப் பட்ட இந்த இயக்கம் இன்று இந்தியாவின் எல்லா பெருநகரங்களிலும் இயங்குகிறது. ஒரு இளைஞன் இன்னொரு இளைஞனிடம் சொல்லி, அவன் மற்றொருவனிடம் சொல்லி இப்படியே இது இளைய சமுதாயத்தில் ஒரு நல்ல இயக்கமாய் மாறி வருகிறது. இன்னும் அதிக இளைஞர்கள் இதனால் உந்துதல் பெற்றுத் தங்களால் இயன்ற அளவு மற்றவர்க்கு உதவி செய்யத் தொடங்கிவிடுவார்கள். அது மட்டும் நடந்தால் மேலே சொன்ன மாதிரி நம் நாடு முன்னேற்றப் பாதையில் விரைந்து வீர நடை போடும். வாய்ச்சொல்லில் மட்டும் வீரராய் இல்லாமல் செயல்வீரர்களாய் இருக்கும் இந்த இளைஞர்கள் அதனை நடத்திக் காட்டுவார்கள். இரண்டுவித இந்தியாவிற்கும் நடுவில் இருக்கும் இடைவெளி வெகு வேகமாய் மறையத் தொடங்கும். நம்பிக்கை என்னும் ஒளி வீசும்.

உன்னை அறிந்தால்

பத்மா அரவிந்த்

தினம் தினம் நாம் இறப்பவரை பார்த்தாலும் அடுத்த நாள் மட்டும் இல்லை இன்னும் இரண்டு வருடம் வரை திட்டமிடுவதில் நாம் தயக்கம் காட்டுவதில்லை. நம்பினோர் கெடுவதில்லை நன்குமறை தீர்ப்பு என்று அது ஆண்டவனிடமோ அல்லது மத குருமார்களிடமோ இல்லை எனில் துன்பப்படும் மனதிற்கு ஆறுதல் சொல்லி பொறுமையாக கேட்கும் மருத்துவரிடமோ நாம் அதீத நம்பிக்கை வைக்கிறோம். இந்த நம்பிக்கையின் அடிப்படியை புரிந்து கொண்டு நேர்மையாக இருப்பதும் இருக்க வேண்டிய கட்டாயத்தை புரிந்து கொண்டு செயலாற்றாமலும் தவறிழைக்கும் போது இன்னும் வலிதான் மிஞ்சுகிறது.

சிறிய வயதிலிருந்தே நம்பிக்கை தரும் சக்தியை உணர்ந்திருக்கிறேன். நான் சொல்லும் நம்பிக்கை நம் மீதே இருக்கும் தன் நம்பிக்கை. எதையும் நேர்மறையாக நோக்கும் ஒருவரிடம் இருக்கும் ஒருவித வசீகரம், பழகும் அனைவரிடமும் தொற்றி கொள்ளும்.

சமீபத்தில் சிகாகோவில் ஒரு ஆராய்ச்சி குழு கிட்டதட்ட இருபது தன்னார்வ தொண்டர்களை இரண்டு குழுக்களாக பிரித்தது. ஒரு குழுவிடம் தினமும் தூங்கும் முன் அன்று நடந்த நிகழ்ச்சியில் அதிக சந்தோஷத்தை தந்த ஒரு நிகழ்வையும், இன்னொரு குழுவிடம் அன்றூ நடந்த எல்லா நிகழ்வுகளையும் எழுத

சொன்னார்கள். நல்ல நிறைவான ஒரு நிகழ்வை மட்டும் தினசரி இரவு எழுதிய குழு உறங்கும் போது நல்ல மனநிலையில் உறங்கி தெளிவாக மறு நாள் வேலைகளை கவனித்ததால் இன்னமும் சிறப்பாக செயல் பட முடிந்து மகிழ்ச்சியும் அவர்கள் திறனும் அதிகரித்ததாக கண்டறிந்தார்கள். அது போல தன்னம்பிக்கையும் நேர்மறையான எண்ணங்களும் எப்போதும் இன்னும் செயலாற்ற திறமையையும் அதே சமயம் சக்தியையும் அளிக்கும். பத்தாம் மாதம் பிறப்பது என்பதை பரம்பொருள் யாருக்கும் எழுதிவைத்தான். இத்தனி நாளில் இறப்போம் என்பதை இரகசியமாக ஏன் வைத்தான் என்ற கவிஞர், தன்னை மனிதன் மதிக்க வேண்டும் என்றுதான் ஆண்டவன் அப்படி செய்ததாக கூறுகிறார். ஆனால் உண்மையில் தெரியாத ஒன்றின் மேல் இருக்கும் சுவாரசியம் தெரிந்துவிட்டால் இருப்பதில்லை. அடுத்த நாள், மணி என்ன நடக்கும் என்பதை ஒருவித எதிர்பார்ப்பில் விட்டுவைத்தலால் வாழ்க்கையின் சுவாரசியம் குன்றாமல் இருக்கிறது. இதில் நம்மையும் அறியாமலேயே நமக்கு ஒரு வித நம்பிக்கை இருக்கிறது.

இதில் ஆண்களை விட பெண்கள் இன்னமும் அதிக நம்பிக்கையுடன் செயல்படுவதாக எனக்கு தோன்றுகிறது. முன்பின் தெரியாத ஒருவனை நம்பி திருமணமும் செய்து கொண்டு எப்படி இருந்தாலும் ஒருநாள் நல்ல வேளை வரும் என்ற எண்ணத்தோடு வாழ்க்கையை வாழும் பலரை கண்டிருக்கிறேன். உறவில் இந்த நம்பிக்கை இன்னும் அதிகமாக வேண்டி இருக்கிறது. தன் மீதே புரிதலையும் நம்பிக்கையும் கொள்ளாதவர்கள் இன்னொருவர் மீது

கொள்வது இயலாத காரியம்.

தன் மீது கொண்ட நம்பிக்கையால் உழைத்து முயற்சி பல கண்டு வெற்றி பெற்ற புலம் பெயர்ந்தவர்களில் ஷான் கானரி, அர்னால்டு போன்றவர்களின் வாழ்க்கை துன்பங்களை கேட்டிருக்கிறேன். ஆனால் இங்கே தன்னம்பிக்கையால் தன் வாழ்வில் முன்னேறியதோடல்லாமல் இன்னொரு பெண்ணையும் தற்கொலையிலிருந்து காப்பாற்றி சமூக சேவை செய்து வரும் ஒ ரு பெண்ணின் வாழ்க்கையை எடுத்துக்காட்டாக தருகிறேன். ஏனெனில் பிரபலமானவர்களை விட சாமானியர்களும் தன் மீது கொண்ட நம்பிக்கையால் வெற்றிப்படிகளில் ஏற முடியும் என்பதோடு அடுத்தவருக்கும் கை கொடுக்க முடியும் என்பதை உணர்த்தவே.

தன் பெற்றோர்களுடன் புளிமூட்டையாய் அடைந்து அமெரிக்காவிற்கு கடத்தப்பட்டபோது சாராலூவிற்கு 6 வயதுதான் இருக்கும். இரண்டு அண்ணன்களுடன் பிறந்தவர், பார்க்க மிகவும் சாதாரணமாய்த்தான் இருப்பார். ஆனால் அமெரிக்காவிற்கு குடியுரிமை இல்லாமல் வந்து கூலி வேலை செய்த பெற்றோர் துன்பங்களை தாங்க முடியாமல் ஒரு வேலைக்காக பணயம் வைத்தது சிறுமி சாராவை. அதன்பின் தந்தையே மகளுடன் தகாத உறவு கொள்ள கோபமுற்ற தாய், சாராலூவை மரத்தில் நிர்வாண மாக கட்டிவைத்து இரவு முழுதும் விட்டுவிட்டார். பயத்தில் அலறிதுடித்து மயக்கமுற்றார். இந்த கொடுமையும் அதன்பின் பாசமுமாய் தாய் மனநோய் வந்தவர்போல செயல்பட, ஒருவழியாக பள்ளிக்கு செல்ல துடங்கினார்.

நன்கு படித்து ஒரு செவிலியாக உருவாகும்போதுதான், காதல் வசப்பட்டு திருமணம் முடித்தார். குழந்தைப்பருவம் முதலே காதல், வன்முறை பிறகு அன்பு என்று மாறி மாறி வரும் சுழற்சிக்கு பழகிப்போய் அதுதான் வாழ்க்கை என்று எண்ணியதால் கணவன் செய்த வன்முறைகள் மனதில் படவில்லை. காவலராக இருந்த கணவன் வாயில் துப்பாக்கியை வைத்து சுட்டுவிடுவேன் என்று சொல்லி பயமுறுத்தி கெஞ்ச வைத்து ரசித்ததும் உணவை தரையில் கொட்டி உண்ணவைத்ததும் கிளறாத கோபம், தன் குழந்தைகளை கணவன் அடிப்பது கண்டு பொங்கியது.
புகார் சொல்ல முடியாமல் கணவனின் அதிகாரம் கட்டுக்குள் வைக்க என்ன செய்வது என்று தெரியாமல் வேதனையில் வாழ்ந்த வருக்கு உணவு ஒரு வித சுகத்தை தர நேர்ம் பார்க்காமல் உண்ண தொடங்கினார். இதனால் உடல் எடை 300 பவுண்டு ஆகியது. பணியில் இருந்து வீடு திரும்பிய இருநாள் குழந்தைகளை அழைத்து கொண்டு கணவன் தன்னை புறக்கணித்து சென்றுவிட்ட கடிதம் கண்னில் பட, தானே ஒரு துப்பறியும் நிபுனரின் துணை கொண்டு தேடி குழந்தைகளை மீட்டெடுத்து விவாகரத்தும் பெற்றார். இவரின் ஒரே ஆறுதல் இவரின் குழந்தைகளே. அடுக்கடுக்காய் இதுபோல வன்முறைகளில் அவதியுறுபவர்கள் தான் தான் காரணம் என்ற குற்ற மனப்பான்மையில் உழலுவது சகஜம். இந்நிலையில் இவருக்கு புற்றுநோய் கட்டிகள் வர அறுவை சிகிச்சையும் மருந்துகளுமாய் வாழ்க்கை மாறியது. மெல்ல மெல்ல சகஜ வாழ்க்கைக்கு திரும்பிய இவர் குழந்தைகளிடம் காட்டிய அன்பும் அக்கறையும் அவர்களை வழக்கறிஞராகவும் மருத்துவராகவும் உருவாக்கியது.

அன்பான ஒருவரை மீ ண்டும் திருமண ம் செய்து கொண்டு நல்ல

செவிலியாகவும் பணியாற்றுகிறார். பிழைக்க முடியாமல் தங்கள் இறுதிக்காலத்தில் வாழும் நோயாளிகளின் மருத்துவமனையில் தலைமை பொறுப்பில் பணியாற்றினார். பிறகு சமூக சேவை செய்ய விரும்பி தற்போது அரசாங்க அலுவலகத்தில் செவிலியாக பணியாற்றுகிறார். மாலை வேளைகளில் பல ஏழை எளியவர்களுக்கு மருத்துவ உதவிகள் ஆலோசனைகள் இலவசமாக வழங்கும் இவரின் வயது 42 என்றால் நம்ப முடியாதுதான்.

தன் முயற்சியால் 300 பவுண்டு எடையிலிருந்து 120 பவுண்டுக்குள் குறைத்து, இப்போது வசீகரமாகவும் விளங்கும் இவர் வன்முறையிலிருந்து பல பெண்களை காப்பாற்றி இருக்கிறார். தற்கொலை செய்ய துணிந்து மாத்திரிகளை விழுங்கிய நிலையில் இருந்த பெண்ணை தொலைபேசி மூலம் காவலர் வரும் வரை பேச்சு கொடுத்து தூங்கவிடாமல் செய்து காப்பாற்றி இருக்கிறார். மூன்று ஆடவர்கள் பணயமாக வைத்திருந்த ஒரு பதின்மவயது பெண்ணை தன் உயிரையும் பண யம் வைத்து காப்பாற்றி இருக்கிறார்.

எனக்கு மட்டும் ஏன் சோகம், கஷ்டம் என்று இல்லாமல், மன அழுத்தம் பீடிக்க பட்டும் அதிலிருந்து விடுதலையாகி உழைத்து முன்னேறிய இவரின் தன்னம்பிக்கையும் உற்சாகமும் எவரையும் தொற்றி கொள்ளும். அலுவலகத்தில் நல்ல திட்டங்கள் நல்ல முறையில் செயலாற்றும் ஒருவரிடம் அவரின் திறமையின் மேல் உள்ள நம்பிக்கையால் எப்படி இன்னும் சிக்கலான திட்டங்கள் தரப்படுகிறதோ அதுபோலத்தான் வாழ்க்கையும். தன் நம்பிக்கை

என்ற மூன்றாவது கை இருந்தால் கடலில் மூழ்கி முத்தெடுக்கலாம் என்ற மேத்தாவின் கவிதை போல வாழ்க்கையும் ஒளி பெறும்.

சின்னச் சின்ன விசயங்கள்

ஜெயஸ்ரீ பார்த்தசாரதி

பாங்காக்

வெளி நாட்டில் பயணம் செய்துவிட்டு இந்தியா திரும்பியதும் இங்கேயுள்ள குறைபாடுகள் பலமுறை எனக்கு நெரடும். எவ்வளவோ விஷயங்களில் ஒழுங்குமுறைக் கொண்டுவர முடியும் - மனமிருந்தால் என்று தோன்றும். இப்படி என்னுள் கேள்விகளை எழுப்பிய சிலக் காட்சிகள்.

சில நாட்கள் முன்பு நான் ஒரு அரசு அலுவலகத்திற்குப் போயிருந்தேன். கோடைகாலமாக இருந்ததால் கைகால்களெல்லாம் ஒரே வியர்வு. கைக் கால் கழுவி, முகத்தில் தண்ணீர் விட்டுக்கொண்டால் தேவலைப் போலிருந்தது. அங்கு வேலைப் பார்க்கும் ஒருவரிடம் கைகழுவும் இடம் எங்கே என்று விசாரித்தேன். அவர் சற்று இடது பக்கம் போய் அங்கே வலதுபக்கம் திரும்புங்கள் என்று வழி சொன்னார். நானும் அவர் சொன்னவழியில் சென்று பார்த்தேன். ஆனால் ஒரு வாஷ்பேஸினும் என் கண்களில் தென்படவில்லை. மறுபடி அவரைப் போய்க் கேட்டால் அவர் அங்கேயேதான் இருக்கிறது என்றார். ம்ஹூம்.. என் கண்களுக்குப் புலப்படவேயில்லை. மறுபடி அவரைக் கேட்கத் தயக்கமாய் இருக்கவே, அதெப்படி அந்த வாஷ்பேஸின் என்

கண்களுக்கு மாயமாய் மறையும் என்று மறுபடி, நிதானமாக உன்னிப்பாகத் தேடினேன்.

ஒரு வழியாய்க் கண்டுப்பிடித்தேன் - ஏகமான காகிதங்கள் கோப்புகள் கட்டுக் கட்டாக அடுக்கி வைத்திருந்த இடத்தில் ஒரு மூலையில் மறைந்து இருந்தது. Paperless ஆபீஸ் என்றெல்லாம் பேசப்படும் இக்காலத்தில் இப்படி ஒரு காகித மலையா என்று ஆச்சரியமாகவும், அந்தக் குவியலைப் பார்த்து மலைப்பாகவும் இருந்தது. இந்தத் தூசி நிரம்பிய கோப்புகளை யாராவதுத் திறந்தாவது பார்ப்பார்களா என்று தோன்றியது. இக்கோப்புகளில், எவ்வளவு பேருடைய எத்தனை முக்கியமான விஷயங்கள் பொதிந்துள்ளதோ?

இந்த மாதிரி பொது மக்கள் அதிகம் புழங்குகிற இடங்களில் கழிவு அறைகள் போன்ற அத்தியாவசியமான வசதிகள் அதிகம் இல்லை. அப்படியே இருந்தாலும் உபயோகப்படுத்துவதைவிடப் பேசாமல் இருப்பது மேல் என்று தோன்றுமளவு அசுத்தம்; துர்நாற்றம். அடிப்படை சௌகரியங்கள் பொது இடங்களில் தடையில்லாமல் கிடைக்கச்செய்வது அந்தந்த அலுவலகத்தின் அல்லது குடியிருப்போரின் பொறுப்பு. பொது இடம் என்றாலே யாருக்குமே பொறுப்பில்லாமல் போய்விடுகிறது என்பதுதான் கசப்பான உண்மை.

நிர்வாகத்தினர் அடிப்படை சௌகரியங்கள் கொடுப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். மற்றொரு பக்கம் பொது மக்களிடமும் தங்கள் சுற்றுப்புறம் பற்றிய விழிப்புணர்வு இருக்க வேண்டும். ஒரு முறைக்

கடற்கரையில் அமர்ந்திருந்தபோது ஒருச் சிறுமித் தான் சாப்பிட்ட சுண்டல் மடித்தக் காகிதத்தைத் தரையில் வீசினாள். எடுத்துக் குப்பைத்தொட்டியில் போடம்மா என்றேன். அவள் நான் சொல்வது காதிலேயே விழவில்லை என்பதுபோல் மறுபுறம் பார்த்திருந்தாள். ஒவ்வொருக் குழந்தைக்கும் சிறுவயதிலிருந்தே சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புப் பற்றி வீட்டிலும், பள்ளியிலும் சொல்லிக் கொடுக்க வேண்டும். பெரியவர்கள் இந்த விதிகளைக் கடைப்பிடித்தால் குழந்தைகளுக்குத் தாமாகவே ஒரு விழிப்புணர்வு வரும். ஆங்காங்கே பூங்காக்களிலும், வெளியிடங்களில் இன்று அழகானக் குப்பைத்தொட்டிகள் - கங்காரு, முயல் போன்று அழகான வடிவங்களீல் உட்கார்ந்து கொண்டுள்ளன. ஆனால் பலருக்கு அவைக் கண்களில் தெரியவில்லைப் போலிருக்கிறது. இதை வாங்கினால் இது இலவசம், இங்கே மலிவு விற்பனை, கடனுதவி போன்ற விளம்பரங்கள்தாம் முதலில் நம் கண்களில் படுகின்றன.

ஆராய்ச்சி மாணவியாக ஒரு சுற்றுச்சூழல் அலுவலகத்தில் நான் வேலை செய்யும்போது நாம் புனிதமாகக் கருதும் கங்கை நீரில் இருக்கும் அசுத்தம் பற்றிப் புள்ளிவிவரங்கள் பார்த்தேன். அந்தப் புள்ளிவிவரங்களைச் சுற்றிதான் என் வேலையும். பல விவரங்கள் தூக்கிவாரிப்போடும். இந்த நீரையா நாம் புனிதம் என்று முங்குகிறோம், அருந்துகிறோம் என்று தோன்றும். அதுபோல் ஜெய்ப்பூர் அருகே புஷ்கர் என்ற புனிதஸ்தலம். இங்கெல்லாம் இருக்கும் சுற்றுப்புறச் சூழல் கேடுகள் (pollution) புனிதத் தலங்களில் குளிப்பதைப் பற்றி நம்மைச் சற்று யோசிக்க வைத்துவிடும்.

அதேபோல் பொது இடங்களில் / சாலையோரங்களில் இருக்கும்

உணவு வண்டிகள் / சிறு சிறு உணவு சாலைகள். ஒரே வாளித்தண்ணீரில் நாம் சாப்பிட்டத் தட்டுகளைப் போட்டுக் கழுவி எடுப்பார்கள். கடையருகே, அடுப்புக்குப்பக்கத்திலேயே அல்லது உண்ணும் இடத்திற்குச் சற்றுத் தள்ளிக் கழிவு நீர் தேங்கியிருக்கும். எப்போதும் சுத்தமாக இருக்கும் என்று பெரிய உணவுசாலைகளையோ அல்லது ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கோப் போக முடியுமா? உணவுசாலைகளில் கைகளில் கையுறை அணிவது அவசியம். ஒரு முறை உபயோகபப்டுத்தித் தூக்கியெறியப்படும் தட்டுகள், டம்ளர்களை உபயோகிக்கலாம். அல்லது சுகாதார முறையில் சுத்தமாக உணவுப் பரிமாறும் வழிமுறைகளைக் கொண்டுவரலாமே? உணவுசாலைகளில் சுகாதார சூழ்நிலை இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தபப்டவேண்டும்.

பாங்காங்கில் வீட்டில் சமையல் செய்யும் வழக்கம் மிக மிகக் குறைவு. பெரும்பாலும் எல்லோரும் வெளியில்தான் உண்கிறார்கள். பாங்காக்கின் டிராபிக் நெரிசல் "உலகப்புகழ்" பெற்றது. அதனால் வீட்டிலிருந்து காலை 7 மணிக்கேப் பலர் கிளம்பிவிடுவார்கள். சிறிது சிறிதாக இரண்டு மணி நேர இடைவேளையில் அடிக்கடி உணவு உண்ணும் பழக்கம் அங்கேயிருப்பவர்களுக்கு. அங்கே பஸ் நிலையம், அலுவலகம் அருகே பல குட்டி உணவு சாலைகள் - mini hotel - இருக்கும். எப்போதும் அவைப் பரபரவென்று மிக சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும். படு சுத்தமாகவும் இருக்கும். அதனால் தினந்தோறும் மகக்ள் இப்படி வெளியுணவை உண்டாலும், உணவினால் வரும் அதிகம் உடல் பாதிப்புகள் வருவதில்லை. அதேபோல் சாலையோரங்களில் நிறையப் பழ வண்டிகள் இருக்கும். பழங்கள் அழகாக வெட்டபப்ட்டு கண்னாடிப்

பாத்திரங்களில் மூடிவைக்கப்பட்டு இருக்கும். கைகளில் கையுறைகள் மாட்டிக்கொண்டு நாம் கேட்டப் பழங்களைக் கலையுணர்வுடன் அழகாக வெட்டி, கைகள் படாமல் எடுத்து ஒரு பாலிதின் உறையில், சின்ன பழங்குத்தி (fruit fork) போட்டு நம் கைகளில் கொடுப்பார்கள். இப்படியெல்லாம் செய்வதற்கு ஏதும் செலவும் அதிகமில்லை. பெரிதாகச் சட்டத் திட்டங்கள் கூட வேண்டாம். சுகாதாரம் முக்கியம் என்ற விழிப்புணர்வுதான் தேவை.

இப்படிச் சாலையோர உணவுக் கடைகள் சுத்தமாக இருந்தால் சாதாரண வருவாய் உள்ளவர்கள் சுகாதாரக்கேடு வரும் என்ற பயம் இல்லாமல் வாங்கிச் சாப்பிட வசதியாக இருக்கும்.

இவையெல்லாம் சின்னச் சின்ன விஷயங்கள். நம்மால் எளிதாகப் பின்பற்ற முடியும். பொது மக்களாகிய நாம் விழிப்புணர்வுடன் இருப்பது ஒருப் பக்கம் என்றால் மற்றொரு பக்கம் அடிப்படை வசதிகளைச் செய்துக் கொடுப்பது நகர நிர்வாகத்தின் கடமை. ஒரு நகரத்தின் ஒவ்வொரு வட்டத்திற்கும் நகர மன்றத்தினர் (Councilor) இருக்கிறார்கள். அவர்கள் கீழ் இருக்கும் பகுதிகளின், சாலைகள், சுற்றுப்புறச்சூழல், பாதுகாப்பு, தண்ணீர், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்கு வழி செய்வது அவர்கள் பொறுப்பு; அவர்கள் கடமை. அவர்களிடம், மக்களுக்குப் பதில் சொல்லும் ஒரு பொறுப்பு(accountability) இருக்க வேண்டும். அப ப்டி அவர்கள் பொறுப்பிலிருந்து வழுவும்போது, பொதுமக்கள் முறையீடு செய்யவும் செய்தால் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் வர வேண்டும். இப்படி இருவழிகளிலும் இணைந்து செயலாற்றினால் பலப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும். என் கையில் அதிகாரம்

இருந்தால் இதுப் போன்ற தீர்வுகளை நடைமுறையாக்க முயலுவேன்.

மாற்றங்கள் நிகழ்வா / நிகழ்த்தப் படுகின்றனவா?

அருணா ஸ்ரீனிவாசன்

நாஸ்காம் (Nasscom - National Association of Software and Services Company) தலைவர் கிரண் கார்னிக் ஒரு கூட்டத்தில் சொன்னாராம். " இந்திய நிறுவனம் ஒன்றுடன் கூட்டு சேர்ந்து தொழில் செய்த ஒரு அமெரிக்க நிறுவனத்திற்கு முதல் இரண்டு மூன்று வருடங்கள் மிக சுலபமாக இருந்தது. அங்கள் என்ன சொன்னாலும், எந்தத் திட்டமாக இருந்தாலும், எந்த விதமாக உற்பத்தி வேண்டும் என்று சொன்னாலும் இந்திய நிறுவனத்தினர் மலர்ந்த முகத்துடன், "ஆகா.. பிரமாதம்; அபடியே செய்துவிடலாம்; பிரச்சனையேயில்லை" என்கிற ரீதியில் பதில்கள் வந்தனவாம். வந்தவர்களுக்கு ஒரே ஆச்சரியம். ஏதேது, நம் வேலை எதிர்ப்பில்லாமல் மிக எளிதாக முடிந்துவிடுகிறதே என்று சந்தோஷப்பட்டார்கள். சில வருடங்கள் பின்பு இதே போல் ரஷ்ய நிறுவனம் ஒன்றுடன் கூட்டு வைக்கப் போனார்கள். அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு திட்ட ஆலோசனைக்கும் "முடியாது" என்கிற ரீதியில் பதில் சொன்னார்களாம். இது சரிவராது; இப்படி செய்ய வேண்டும் என்று தங்கள் எண்ணங்களைச் சொன்னார்களாம். அமெரிக்கக் நிறுவனம் அவர்களுடனும் சேர்ந்து தொழில் செய்தது. இன்னும் சில

வருடங்கள் சென்ற பிறகு ரஷ்யர்கள் சொன்ன மாற்றுக் கோணங்கள் மூலம், இறுதி உற்பத்தியில் குறிப்பிடத்தகுந்த மேம்பாடுகள் இருந்ததாம். இது இறுதியாக வெளி வரும் உற்பத்தியின் தரம் பற்றினது மட்டுமல்ல. ஒரே முடிவை நோக்கி நமக்குத் தென்படும் பலவித தீர்வுகளைப் பலவித கோணங்களில் நாம் யோசிக்க வேண்டும் என்பதுதான் நான் சொல்ல வருவது. இந்தியர்கள் பெரும்பாலும் சிறந்த "செய்து முடிப்பவர்களாக" (executors) இருக்கிறார்கள். ஒரு வேலை சொன்னால் அதைப் பற்றி எதிர் கேள்வியில்லாமல், ஒரு தேர்ந்த முறைப்படி சிறப்பாக செய்து முடிப்பார்கள். ஆனால் இன்னும் திறம்பட எப்படி செய்யலாம்; இருக்கும் முறையில் என்ன குறைபாடுகள்; மாற்று வழிகளில் என்ன ஆதாயம் / குறைகள் என்று ஆராய்ந்து புதுக் கோணங்களைக் கண்டுபிடிப்பதில் (innovation) ஆர்வம் காட்டுவதில்லை." என்றாராம்.

கிரண் கார்னிக் கூற்றில் உண்மையுள்ளது. மேலிருந்து வரும் ஆணைகளைக் கேள்வியில்லாமல் செய்து முடிப்பது என்பதை ஒருவித பலமின்மை என்று கூட சொல்லலாம். பெரியோர் சொல் கேள் நல்ல நெறிதான். ஆனால் அதைச் சற்று அதிகபட்சமாகவேப் பழகிவிட்டோமோ என்னவோ.

சில நாட்கள் முன்பு தொலைகாட்சியில் ரங் டே பசந்தி என்ற ஹிந்தி சினிமாப் பற்றி கருத்தரங்கு. அதில் நடிகர் அமீர்கான் படத்தில் தனக்குப் பிடித்த வசனம் என்று கூறுகிறார்.

" வாழ்க்கையை வாழ்வதற்கு இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று, வாழ்வில் நடப்பதையெல்லாம் சகித்துக் கொண்டு ஒன்றும் மாற்றம்

செய்ய முனையாமல் அப்படியே வாழ்ந்து முடிவது. மற்றொரு முறை, பொறுப்பை உன் கையில் எடுத்துக்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்து மாற்றங்கள் கொண்டுவருவது." இந்தப் படம் வெளி வந்தபின் அனேக இளைஞர்கள் இந்த வசனத்தை அடிக்கடி சொல்லிக்கொள்வதாக இணையத்தில் பேசப்படுகிறது.

பாரதீய வித்யா பவன் அமைப்பைச் சார்ந்த பள்ளிகளின் குறிக்கோளுரை (Motto) "நல்ல சிந்தனைகள் எல்லாத் திசைகளிடமிருந்தும் நம்மை வந்து சேரட்டும்" - என்பதாகும். (Let noble thoughts come to us from everyside). சினிமா பொன்ற சக்தி வாய்ந்த ஊடகத்தினால் சில சமயம் தீய பாதிப்புகள் சமூகத்தின் மெல் இருந்தாலும் பல சமயங்களில் நல்ல பாதிப்புகளையும் ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தது என்பது இந்தப் படத்தின் இந்த வசனம் பலரின் கவனத்தை ஈர்த்திருப்பதிலிருந்து புரிகிறது. நல்ல சிந்தனைகள் எந்தத் திசையிலிருந்தும் வரலாம்; ஏற்றுக்கொள்ள திறந்த மனது வேண்டும்.

சமுதாய மாற்றங்கள் சில சமயங்களில் சிறுப் பொறியாக யாரோ ஒரு தனி மனிதரின் ஆழ்மனதில் உருவாகின்றன. பின்னர் சிந்தனைகள் வலுப்பெற்று, எங்கே கரு உருவாயிற்று என்ற சுவடு கூடத் தெரியாமல் விசுவ ரூபம் எடுத்துப் பரவலாக வியாபிக்கின்றன. வேறு சில சமயங்களில் மாற்றம் வேண்டும் என்ற சிந்தனை பலரிடம் ஒரே சமயத்திலும் வலுவெடுக்கலாம்.

அடிப்படையில் மாறுதல் இல்லாத வாழ்க்கை வளர்ச்சியில்லாமல் தேங்கிப் போகும். வாழ்க்கையிலிருந்து நாம் பெறுவது பற்றி

மட்டுமே யோசிக்காமல், வாழ்க்கைக்கு நம் பங்களிப்பு என்ன என்று யோசிப்பதும் முக்கியம்.

2001 ம் ஆண்டு குஜராத்தில் நிகழ்ந்த பெரும் பூகம்பமும் அதீத சேதங்களும் உங்களுக்கு நினைவிருக்கலாம். குடியரசு தினத்தை ஒட்டி வந்த செய்திகளில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ், இதை நினைவு கூர்ந்து பூகம்பத்தின் மையமான பூஜ் நகர் எப்படிக் கடந்த ஐந்து வருடங்களில் அந்தத் துக்கத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முனேற்ற நடைப் போடுகிறது என்று ஒரு செய்திக் கட்டுரை வெளியிட்டிருந்தது.
http://www.indianexpress.com/full_story.php?content_id=86645
அதிலிருந்து சில வரிகள்:
" 2001, குடியரசு தினத்தன்று ரிக்டர் அளவுகோலில் 7.9 அளவு இருந்த ஒரு பெரும் பூகம்பம் இந்த நகரைத் தாக்கியபோது மற்ற எல்லா நகரங்களையும் போல இந்த நகரும் படு மோசமான கட்டுமான வசதிகளைக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது காண்பது அகண்ட சுத்தமான சாலைகள், சுத்தம் சுகாதார வசதிகள், மற்றும் பூகம்பத்தைத் தாங்கும் சக்தியுடைய கட்டிடங்கள்.

அன்று நிகழ்ந்த பெரும் சேதத்தில் ஊரே அடியோடு அழிந்தது. பொருள், உயிர் சேதத்தில் மூழ்கிய அந்த ஊர் இனி திரும்பவும் உயிர்த்தெழவே முடியாது என்றுதான் அனைவரும் நினைத்தார்கள் - ஏதாவது மாயம் நிகழ்ந்தாலொழிய. ஆனால் அது நிகழ்ந்தேவிட்டது. நகரை மறு நிர்மாணம் செய்யும் பணி என்ற பெயரில் அந்த மாயத்தைக் குறிப்பிடுகிறார்கள். அகண்ட சாலைகள் 80 கிமீ தூரத்திற்குப் போடபப்ட்டுள்ளன. 180 கோடி ரூபாய்

செலவில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. 23 பள்ளிகள், ஒரு பெரிய ஆஸ்பத்திரி என்று பல கோடி ரூபாய்களில் அடிப்படைக் கட்டுமான வசதிகளின் பணிகள் நடந்து முடிந்துள்ளன.

இத்தனையும் பூஜ் நகரின் பாரம்பரியத்தையும் நினைவில் கொண்டே நிறைவேற்றப்பட்டுள்ளன. நகரின் வாசல்கள் என்றழைக்கபப்டும் நான்கு வாயில்களின் இடிபாடுகள் தனியார் நிறுவனங்களின் மூலம் பழுது பார்த்து புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. பழையப் பூங்காக்கள் சரிசெய்யப்பட்டு, புதிதாகவும் நிறையப் பூங்காக்கள் எழும்பியுள்ளன.
இப்படி பூஜ் நகர் மறுபடி உயிர்த்தெழுவதில் உள்ளூர் மக்களும், தனியார் துறையும் அரசும் இணைந்து வேலை செய்ததும் முக்கியக் காரணம். பழுது மற்றும் சாலை வேலைகள் நடக்கும்போது கடைக்காரர்களும் தங்கள் கடைகளை மூடி ஒத்துழைத்து, பணிகள் பற்றி பல அமைப்புகளுடன் நடு நிசி இரண்டு மணி வரையிலும் கூட கலந்தாலோசித்து, எல்லாவிதத்திலும் மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அயராமல் சலிக்காமல் கொடுத்துள்ளார்கள். " தண்ணீர் குழாய்கள் மற்றும் கழிவு நீர் குழாய்கள் போடும் வேலை எட்டே மணி நேரத்தில் முடிந்தது என்றால் எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீகளா?" என்று ஒரு நகர்வாசி கேட்கிறார்.

நல்லது; இப்போது கேள்விப்படுகிறோம். " என்று அந்தச் செய்திக் கட்டுரை முடிகிறது.

பல வருடங்கள் முன்பு காலரா நோய் தாக்கிய சூரத் நகரும் இப்படிதான் பெரும் சேதத்திலிருந்து மீண்டு புதிய நகராக

உருப்பெற்றது. இங்கும் சாதாரண மக்களின் ஒத்துழைப்பும் அயரா முயற்சியும்தான் காரணம்.

கப்பல் இஞ்சினீயராக பலகாலம் உலகம் சுற்றிவிட்டுப் பின்னர் சென்னையில் வந்து குடியேறிய ஸ்ரீதரன் என்பவருக்குத் தன் 58 வது வயதில் இந்தியாவில் வாழ்க்கை நிறையப் பிரச்சனைகளுடன் இருப்பதாகத் தோன்றியது. உலகில் எங்கு சென்றாலும் இந்தியாத் திரும்பி வந்து வாழவேத் தன் மனம் விரும்பியதை உணர்ந்தார். ஆனால் இங்கு உள்ளப் பிரச்சனைகளும் சகிக்க முடியவில்லை. இருந்தாலும் இது ஒன்றும் அத்தனை மோசமான சமுதாயமாக இருக்க முடியாது என்று உள்ளூர நம்பிக்கை. மோசமான சமூகமாக / மக்களாக இருந்தால் என்றோ அழிந்து போயிருக்கும். பல ஆயிரம் வருடங்களாக உயிர்ப்புடன், சுவாரசியமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்டில் எங்கோ பல மக்கள் நல்லப் பங்களிப்பு செய்து கொண்டிருக்கிறார்களோ? அதனால்தான் இந்தத் தேசம் இன்னும் சிறப்பாக வாழ்ந்து பரிமளிக்கிறதோ? என்று அவருக்குத் தோன்றியது. அப்படி இங்கே யாரோ சிலர் சமூகத்துக்குப் பங்காற்றும் நல்ல செயல்களை - அவை ஊடகங்களில் தெரிய வரும்போது தேர்ந்தெடுத்து சேகரிக்க ஆரம்பித்தார். இந்தியாவின் பிரச்சனைகள் பற்றி வருத்தமடைந்த அவர் மனதுக்கு இந்தச் சேகரிப்பு ஆறுதலாகவும் இருந்தது.

ஆனால் அது அத்தனை எளிதாகவும் இல்லை. Goodnews is no news. Bad news only makes news" என்கிற ரீதியில் ஒரு பக்கம் கொலை, கொள்ளை சேதம் போன்ற செய்திகள்; அல்லது பாட்டும் நடனமும் என்று கேளிக்கை செய்திகள் என்று ஊடகங்களில் நல்ல

செய்தியைப் பார்ப்பதே பெரிய செயலாக இருந்த நிலையில் இவர் அயராமல் சேர்க்க ஆரம்பித்தார். அவர் சேகரிப்பு மெள்ள வளர ஆரம்பித்தது.

நாளடைவில் இரண்டு நிகழ்வுகள் இந்தியாவில் நடந்தன. ஒன்று, பொருளாதார சீர்திருத்தங்கள். திடீரென்று இந்தியப் பொருளாதாரம் மேம்படவும் பல துறைகளில் நல்ல மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. தகவல்தொழில் நுட்பத்தில் இந்தியா வளர வளர பல நல்ல செய்திகளும் குவிய ஆரம்பித்தன. இரண்டாவது நிகழ்வு, இணையம். தான் திரட்டும் நல்ல செய்திகளையெல்லாம், அவற்றில் ஆக்கப்பூர்வமாக ஈடுபடும் பங்களிப்பார்களையெல்லாம் வெளியுலகுக்குத் தெரியபப்டுத்த வேண்டும் என்று நினைத்தார் ஸ்ரீதரன். அச்சுக்கூடம் என்று முதலீடு செய்யாமல் இணையம் வழியே செய்திப் பரப்பும் வசதியும் வந்துவிட்டது.

இன்று அவர் ஆரம்பித்த www.goodnewsindia.com தளம் உலகெங்கும் பல வாசகர்களுடன் நடைபோடுகிறது. நடுவில் சிக்கல்களும் எழாமல் இல்லை. வாசகர்கள் பக்கத்தில் சில விமரிசனங்களும் வைத்துள்ளார்கள். ஆனாலும் மக்கள் மனதில் நல்ல பாதிப்பை ஏற்படுத்தும் எண்ணத்துடன் மாறுதல்கள் வரும் என்ற நம்பிக்கையை நோக்கி நகருவதே இலட்சியமாக நடைபோடுகிறது இந்தத் தளம். இன்று பல தன்னார்வத் தொண்டர்களும் நிறையப் பங்களிக்கிறார்கள்.

இப்படி சமுதாயத்திற்கு, தாங்கள் வாழும் அக்கம்பக்கம் இடங்களுக்கு என்று பங்களிப்பு செய்யும் மனோபாவம் இன்று

பெருகி வருகிறது. சென்னையிலும் ஆங்காங்கே உள்ளூர்வாசிகள் ஒன்று சேர்ந்து தங்கள் வட்டங்களை மேம்பட செய்வது நிறையவே தென்படுகிறது. தாம்பரம் அருகே செம்பாக்கம் என்ற புற நகர் பகுதியில் உள்ள ஏரியைத் தூர் வாரி சுத்தம் செய்து முடிக்கும் வேலையைத் தங்கள் கையில் எடுத்துள்ளனர். மயிலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதி மக்கள் கோயில்களின் குளங்களைச் சுத்தம் செய்து அழகுறத் தெப்பம் விடவும் செய்கின்றனர். மற்றொரு இடத்தில் குடியிருப்போர் தங்கள் தெருவைச் சுத்தமாக்கும் பணியில் கருத்தாக ஈடுபடுகின்றனர். இப்படிப் பல இடங்களில் மக்கள் தாங்களே முன்வந்து தங்கள் சுற்று சூழலையும் இருக்கும் நகர்ப்புறங்களின் தேவைகளையும் கவனிப்பது என்பது இன்று தென்படும் வெகு ஆரோக்கியமான நிகழ்வு.

இந்தியா 2020: ஐம்பெரும் கனவுகள்-

செ.ச.செந்தில்நாதன்

சென்னை

இப்படி ஒரு பொற்காலம் எப்போதும் வாய்த்ததில்லை இந்தியாவுக்கு. உலகத்தின் பார்வை இந்தியாவின் மீது இப்போது இருப்பதைப் போல எப்போதும் இவ்வளவு சாதகமாக இருந்ததில்லை"... இவ்வாறு எழுதுகிறார்கள் இந்தியாவின் முன்னணி பத்திரிகை ஆசிரியர்களும் அவற்றில் கட்டுரைகளை எழுதும் அறிவுஜீவிகளும்.

"இது ஆசியாவின் நூற்றாண்டு. இந்தியாவும் சீனாவுமே எதிர்வரும் பதிற்றாண்டுகளின் பொருளாதார பேரரசுகள்" என உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களும் பிஸினஸ் பத்திரிக்கைகளும் விவாதிக்கிறார்கள்.

இந்தியர்கள் மீது ஒரு அதீத மரியாதை. இந்தியப் பொருள்களுக்கு வியப்புடன் வரவேற்பு, இந்திய ஜனநாயக அரசமைப்பு பற்றி பெரிய ஆச்சரியம் என டன்கணக்கில் எழுதித்தள்ளுகிறார்கள். பொறுப்புணர்வு மிக்க குடியரசு இந்தியா என ராஜதந்திர வட்டாரங்களில் பேசுகிறார்கள்.

இந்தியாவில் 90களுக்கு பின் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கிய தலைமுறையினரில் ஒரு பெரிய பட்டாளத்தினர் மத்தியில் உற்சாகம் அலைமோதுகிறது. அவர்கள் இந்தியாவின் தகவல் நுட்பப் புரட்சி மற்றும் பிபீஓ துறை வருகை போன்ற புதுமைகளில் நேரடியாக பங்கெடுப்பவர்கள். அடுத்த யுகத்துக்கு நாம் வந்துவிட்டோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். டைடல் பார்க்குகளும் தில்லி மெட்ரோ ரெயிலும் புதிய இந்தியாவின் கோயில்களாகக் காட்டப்படுகின்றன. இந்தியா வல்லரசாகிவிடும் என்று அவர்கள் அடித்துச் சொல்கிறார்கள்.

சொல்லப்போனால், குடியரசு தலைவர் அப்துல்கலாமின் கனவு இயக்கம் தனது பயணத்தை வெற்றிகரமாகத் தொடங்கிவிட்டது போலவே தெரிகிறது. துறைவாரியாக இந்திய நிறுவனங்கள் உலக சந்தையில் பெற்றுவரும் வெற்றிகளும் இந்தியாவுக்குள்ளேயே அடையாளம் தெரியாமல் மாறிவரும் மாநகர வெளியின் ஈர்ப்பும் 2020 இல் கலாமின் கனவை இந்தியா நிறைவேற்றிவிடும் என்று எதிர்பார்க்க வைக்கின்றன.

"புதிய இந்தியா உதயமாகிவிட்டது. இந்தியா ஒளிர்கிறது. நிஜமாகவே."

– இதெல்லாம் கிடக்கட்டும் விடுங்கள். ஆனால், இந்த இந்தியா மாநகர்ப்புற மேல் மற்றும் மேல் நடுத்தர வர்க்க இந்தியர்களின் இந்தியா மட்டுமே என்பதை மறவாதீர்கள்.

உண்மையில் எண்பது சதவீதத்துக்கும் மேற்பட்ட பாமர மக்களுக்கு இதெல்லாம் தெரியவே தெரியாது. தெரிந்திருந்தாலும் அவர்களுக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. மாநகர்ப்புற புதிய இந்தியர்களைப் போல அவர்கள் கனவு காண்பதில்லை. நம்பிக்கை வைப்பதும் இல்லை.

துரோகம் – இதுதான் அந்த பெரும்பான்மை இந்தியர்கள் தங்கள் நிகழ், எதிர்கால வாழ்க்கை குறித்து நம்பிக்கை இல்லாமல் போவதற்கு காரணம்.

மக்கள் அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் வஞ்சிக்கப்படுகிறார்கள். நுகர்வோர்கள் நிறுவனங்களால் வஞ்சிக்கப்படுகிறார்கள். வாசகர்கள் மீடியாவாலும் தொண்டர்கள் கட்சிகளாலும் வஞ்சிக்கப்படுகிறார்கள். எல்லா வாக்குறுதிகளும் காற்றில் பறந்துபோய்விடுகின்றன. புதிய பொருளாதாரம் பெரும்பான்மை மக்களுக்கு அவர்கள் விரும்பிய வாழ்க்கையை அவர்கள் விரும்பிய முறையில் உருவாக்கித்தரவில்லை.

இது ஜனநாயகத்தின் மீதும் பிற நவீன அரசியல், சமூக அமைப்புகள் மீதும் கடும் வெறுப்பை ஏற்படுத்துகிறது. இதனால் உருவாகக்கூடிய ஒரு மாபெரும் அவநம்பிக்கை சுனாமி சாதாரண மனிதர்களை மட்டுமில்லாமல் அவர்களுக்காக குரல்கொடுக்கிற அரசியல் செயல்பாட்டாளர்கள், சமூக மாற்றம் கோருவோர், மக்கள் நலனில் மீது அக்கறையுடைய அறிவுஜீவிகள் போன்றவர்களையும் மூழ்கடிக்கிறது.

நம்பிக்கை குறித்து நினைத்துப் பார்க்கக்கூட முடியாத ஒரு மனச்சோர்வில் அவர்கள் விழும் போது கற்பனை வற்றுகிறது.

இந்தியாவின் நடுத்தரவர்க்கங்களின் குரலோசை என்று கருதப்படுகிற தேசிய அல்லது மாநில ஊடகங்களில் அறிவுஜீவிகளிலிருந்து வாசகர் கடிதம் எழுதுபவர்கள் வரை எல்லோரும் இந்த ஜனநாயகத்தைத் திட்டித்தீர்க்கிறார்கள். ராணுவ ஆட்சி வேண்டும், ஜனாதிபதி ஆட்சி முறை வேண்டும், இரண்டே இரண்டு கட்சிகள்தான் இருக்கவேண்டும், படித்தவர்கள் மட்டுமே ஆட்சிக்கு வரவேண்டும், ஏன் அவர்கள் மட்டும்தான் வாக்களிக்க வேண்டும், எதற்கெடுத்தாலும் இவர்களை தூக்கில் போடவேண்டும் என்று இந்தியாவின் நடுத்தரவர்க்கத்தைப் பிரதிபலிப்பதாக கூறுகிறவர்கள் கத்திக்கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தின் மீது அவநம்பிக்கை வரவழைப்பதற்காக இவர்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

நாம் ஊழலற்ற, திறமை வாய்ந்த அரசுகள் வேண்டும் என்றும் இந்தியா வளர்ந்த நாடாக இருக்கவேண்டும் என்றும் வறுமையும் வேலையின்மையும் ஒழிய வேண்டும் என்றும் கனவுகாண்கிறோம். ஆனால், அவை ஏன் கனவுகளாகவே காற்றில் கரைந்து போய்விடுகின்றன?

ஏனென்றால், நமக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் போவதுதான். ஜனநாயகம் என்றாலே ஏதோ இளிச்சவாய்த்தனமான விஷயம் என்று நிறைய பேர் நினைக்கிறார்கள். ஆனால் இந்தியா வல்லரசு ஆக வேண்டும் என்கிறார்கள். இந்தியா ஒரு ஜனநாயக நாடாக இல்லாமல் ஒரு வல்லரசாக மட்டும் ஆவதால் அதன் பெரும்பான்மையான மக்களுக்கு என்ன பிரயோசனம்

என்று எனக்குத் தெரியவில்லை. சொல்லப்போனால். அத்தகைய கருத்தை நாம் வலுவாக எதிர்க்கவேண்டும்.

பல குறைபாடுகள் இருந்தாலும், வரலாற்றின் அதியற்புத நிகழ்வாக, இந்திய சுதந்தரத்தின் விடியல் காலத்தில், காந்தி, நேரு, அம்பேத்கர் போன்றவர்களுக்கு ஜனநாயக கட்டுமானத்தில் மிகப் பெரிய நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கைதான் இன்றைய இந்தியாவை உருவாக்கியது. ஒரு பர்மாவைப் போல ராணுவ ஆட்சியில் சிக்காமலும், பாகிஸ்தான் போல மதவாத நாடாக மாறாமலும், பல மூன்றாம் உலக நாடுகளைப் போல பனானா குடியரசுகளா இழிந்துபோகாலும், இந்தோனோஷியா அல்லது துருக்கி போல மாற்றங்களைக் கண்டு அஞ்சி நடுங்குகிற நாடாக மாறாலும், ஏதோ ஒரு விதத்தில் இன்று வருங்கால வல்லரசு என்று உலகத்தால் எதிர்பார்க்கப்படுகிற நாடாக இந்தியா மாறியிருக்கிறது என்றால் அது மேலை நாட்டு அறிவியக்கத்தின் பாதிப்பால் இந்திய அரசியலமைப்புச் சட்டங்களை நிறைவேற்றிய, நவீனத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்த அத்தகைய தலைவர்கள் போட்ட அஸ்திவாரம்தான்.

ஆனால், ஜனநாயக உலகில் மிக இளைய வயதுடைய நாடான இந்தியாவில் நாம் அனைவரும் ஜனநாயாக கத்துக்குட்டிகளே.

இந்த 50 ஆண்டுகளில் நமது வரலாறு ஒட்டுமொத்தமாக நெகடிவாகவும் இல்லை, பாசிட்டிவாகவும் இல்லை. எங்கே எல்லாம் நம்மால் முடிந்தவரை ஜனநாயகத்தை பின்பற்றுகிறோமோ அங்கே எல்லாம் நல்ல விளைவுகளைக் காண்கிறோம். எந்த அம்சங்களை நாம் இன்னும் முழுமையாக அல்லது சரியான அர்த்தத்தில் முறையாக ஜனநாயகப்படுத்தவில்லையோ அந்த அம்சங்களால் எல்லாம் நாம் கடுமையாக பாதிக்கப்பட்டுவருகிறோம்.

ஆனால், அந்த அடிப்படையான ஜனநாயகக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வழிகளை நாம் புதுப்பித்தாக வேண்டும்.

இந்த அடிப்படையிலேயே எனது எண்ணங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய ஐந்து கனவுகளாக விவரிக்க உள்ளேன்.

இந்தியாவைப் பற்றிய அமர்க்களமான கலர் கலர் கனவுகளைக் காண இந்த ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை நிறைய ஒத்தாசை செய்வதாக எனக்குத் தோன்றுகிறது.

அந்த கனவுகள் நனவாக சில அடிப்படை மாற்றங்கள் நமக்குள் நிகழ்ந்தாக வேண்டும். அந்த அடிப்படை மாற்றங்கள் கூட இப்போதைக்கு கனவாகத்தான் இருக்கிறது. என்றாலும் அவை நடைமுறைப்படுத்தக்கூடிய கனவுகள்தான். ஆனால், நடைமுறைப் படுத்தக்கூடியவை என்றுதான் சொல்லலாமே ஒழிய,

எளிதான முறையில் நடைமுறைப்படுத்தக்கூடியவை என்று சொல்லமுடியாது. இருக்கட்டுமே, ஜனநாயகத்தின் சுவாரஸ்யமே அதில்தானே அடங்கியிருக்கிறது!

இப்போது அந்த சில கனவுகளைப் பார்ப்போம்:

1. பிரதிநிதித்துவ ஜனநாயக முறையில் மாற்றம் செய்யவேண்டும்

இது இருப்பதிலேயே மிகப் பெரிய கனவு. ஆனால் இது நனவானால் மற்றவை சாத்தியமாகும்.

ஜனநாயகத்தின் அடிப்படை சட்டத்தின் ஆட்சி. சட்டம் இயற்றப்படுவது மக்கள் பிரதிநிதிகளின் அவைகளில். இந்தியாவில் மிகப் பெரிய மாற்றங்களை நாம் நாடாளுமன்றம், சட்டமன்றம் போன்ற அமைப்புகளினூடகவே சட்டபூர்வமான முறையில் சாதிக்கிறோம். மக்கள் மத்தியிலிருந்து எழும் அல்லது அவர்களுக்கு தேவையானது என்று கருதும் உரிமைகள் அல்லது வசதிகளை அரசியல் கட்சிகள் தாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு செய்கின்றன. இவற்றில் சில சாராம்சத்தில் ஜனநாயகத்தன்மைக்கே விரோதமான சட்டங்களாகவும் இருக்கின்றன. ஆனால், நாடாளுமன்றத்தின் மூலமாக பொதுமக்களின் வாழ்க்கையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முறையே நவீன ஜனநாயகத்தின் வழிமுறை.

50களிலிருந்து பார்த்தால், குடியரசு அரசு அமைவு, அனைவருக்கும் வாக்குரிமை, மாநில பிரிப்பு, இட ஒதுக்கீடு, பாரம்பரிய குடும்ப முறையில் சிறிது சிறிதாக பெண்ணுரிமை, வங்கிகள் தேசிய உடைமை, ஐந்தாண்டு திட்டங்கள், பசுமைப் புரட்சி, பிறகு 90களில் பொருளாதார சீர்த்திருத்தம் என்று பல முக்கிய விவகாரங்கள் நாடாளுமன்றத்தினூடாகவே நடைமுறைக்கு வருகின்றன. அதைப் போலவே மாநிலங்களிலும். எதிர்மறையான அம்சங்களும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்றன. குறிப்பாக, தடா, பொடா போன்ற ஆள்தூக்கி சட்டங்கள்.

ஆனால், புவியியல் ரீதியில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் இந்த குறிப்பிட்ட வகை பிரதிநிதித்துவ முறையில் அடிப்படையில் ஒரு கோளாறு இருக்கிறது. அது மெஜாரிரேட்டியனிசம். பெரும்பான்மை மக்களின் குரலைப் பிரதிநிதித்துவம் செய்வதே ஜனநாயகத்தின் அடிப்படை என்பதற்கு அர்த்தம் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பெரும்பான்மையராக முன்பே ஏதோ ஒரு அடிப்படையில் திரண்டிருக்கும் - மத, ஜாதி, மொழி, அல்லது பிரதேச அடிப்படையில்- ஒரு கூட்டத்தின் கருத்தே ஜனநாயகக் கருத்து என்பதாகாது.

எனவே தற்போதுள்ள தொகுதி அமைப்பு முறை, புவியியல் ரீதியிலான பிரிவு முறை, ஒரு முழுமையான பிரதிநிதித்துவ அமைப்பு அல்ல. இந்தியாவின் பன்மைத்தன்மையை சட்டமியற்றும் அமைப்புகளால் இதுவரை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்த முடியவில்லை.

இந்தியாவில் ஜாதி என்பது ஒரு உள்ளூர் விவகாரம் என்பார் அம்பேத்கர். அந்த ஜாதியை புவிசார் தேர்தல் முறை முற்றிலும் அடுத்த மட்டத்துக்கு எடுத்துச்சென்று அதற்கு ஒரு சாகாவரம் கொடுத்திருக்கிறது. ஒருவிதத்தில் இது தவிர்க்கமுடியாதது. பெரும்பான்மையான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இதன் மூலமே உரிமைகள் கிடைத்தன. ஆனால், இது முழுமையான சுதந்தரத்துக்கு வழி அல்ல. இப்போது, இந்தியாவில் எல்லாக் கட்சிகளும் ஜாதி, மத, பிரதேசக்கட்சிகள்தான். ஒரு தொகுதியின் மக்கள்தொகையின் பெரும்பான்மை நிறம் என்ன என்பதைப் பொறுத்தே மக்கள் பிரதிநிதித்துவத்துக்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவர்களில் யாருக்கு அதிகாரம் இருக்கிறதோ அவர்களின்- மெஜாரிட்டேரியன்களின்- கைப்பாவையாக அரசு மாறிவிட்டது. நாடாளுமன்றத்திலிருந்து பஞ்சாயத்து யூனியன் வரை இதே நிலைமைதான்.

இதனால் பாதிக்கப்படுவது ஒடுக்கப்படும் சாதிகளும் பிற சிறுபான்மை சமூகத்தவர்களும் மட்டுமல்ல. அரசியல் ரீதியாக இந்த மெஜாரிட்டேரியன் அரசியலுக்கு மாற்றாக செயல்பட விரும்பும் அனைத்து அரசியல் அமைப்புகளும்தான். ஒரு பக்கம் இது மிகவும் பிற்போக்கான, பாசிச கோட்பாடு உடையவர்களுக்கும் பாதகமாக இருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும், ஜனநாயக சிந்தனையாளர்களை இது நேரடி தேர்தல் அரசியலில் போட்டியிடமுடியாதவர்களாக்கிவிட்டது என்பதே கொடுமையான விஷயம்.

இந்தியாவின் இன்றைய மிக மோசமான நிலைக்கு இது முக்கிய காரணம். இங்கே நல்ல அரசியல்வாதிகள் தோன்ற முடியாமல் போவதற்கு இதுதான் காரணம். மத, சாதி, பிரதேச அதிகாரங்களோடு மக்கள் நலம்நாடும் அமைப்புகள் மோதமுடியவில்லை. அதை மீறி சென்றால். எரிகிற கொள்ளியில் எந்த கொள்ளி நல்ல கொள்ளி என்று தேடி கூட்டணி வைக்கவேண்டிய அவலம்.

இதற்கென்ன மாற்று? இன்றைய புவிசார் பிரதிநிதித்துவ முறையோடு அதற்கு இணையாக குழுசார் பிரதிநிதித்துவ முறையையும் சேர்க்கவேண்டும். (கவனிக்கவும், "மாற்றாக" அல்ல, அதனோடு சேர்ந்து "இணையாக").

அதாவது, இன்றைய புவிசார் முறையுடன் - அதிலும் உரிய சீர்த்திருத்தங்களுடன்- விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையையும் கொண்டுவரவேண்டும். அதன் மூலம் பாதி பிரதிநிதிகளை கோட்பாட்டு சார்பின்

அடிப்படையில் மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். அதாவது எல்லோருக்கும் இரட்டை வாக்குரிமை வேண்டும். ஒரு ஓட்டு உள்ளூர் பிரதிநிதிக்கு, இன்னொரு ஓட்டு அவர் விரும்புகிற ஒரு அரசியல் கோட்பாட்டை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிக்கு.

இது நடந்தால், மாற்று அரசியல் கருத்துடையோர் சட்ட உருவாக்கத்தில் நேரடியாக பங்கேற்கமுடியும். மலைவாழ் மக்களிலிருந்து தொழில்முனைவோர்கள் வரை யாரும் யாரையும் சார்ந்திருக்காமல் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியும். தலித்துகள் ஒரு மேல்சாதி கட்சியோடு கூட்டணி வைத்துத்தான் ஆகவேண்டும் என்ற நிர்க்கதி ஓரளவு குறையும். ஒரு நாடாளுமன்றத் தேர்தலில் மாணவர்கள் தங்கள் சார்பில் சில பிரதிநிதிகளை அனுப்பலாம். நாட்டில் உள்ள பெண்கள் எல்லோரும் தங்களுக்கென்று கட்சி வைத்துக்கொள்ளலாம். மகளிர் அணி போன்ற மோசடிகளிலிருந்து விடுதலை அடையலாம். இது பிற எந்த அரசியல், பொருளாதார மாற்றங்களையும் முன்பை விட அதிகமாக சாத்தியமாக்கும். இந்த சந்தடி சாக்கில் சில ஜனநாயக விரோத சக்திகள் கூட நாடாளுமன்றத்தில் நுழையலாம். தப்பில்லை. அவர்கள் உள்ளே வரட்டும், பார்த்துக்கொள்ளலாம்.

இது ஒரு பெரிய கனவு. பெண்களுக்கு முப்பது சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கக்கூட ஒப்புக்கொள்ளாத சில கட்சிகள் இருக்கும் இந்த சூழலில் இதை நடைமுறைக்கு கொண்டுவருவது சுலபம் இல்லைதான். ஆனால், இந்திய ஜனநாயகத்தின் அடிப்படை மேலும் வலுவாக ஆக, இதைவிட வேறு வழியில்லை. ஏனென்றால், இப்படி ஒரு மாற்று ஏற்பாடு நடக்காமல் மாற்று அரசியல். பொருளாதார, சமூக மாற்றங்களை நாடாளுமன்றத்தில் யார் அறிமுகப்படுத்துவார்கள்?

2000 ஆண்டுகளுக்கும் மேலாக பிற்போக்கான அரசியல் நடந்துவந்த இந்தியாவில் தற்போதைய நாடாளுமன்ற ஜனநாயகம் சாத்தியப்படுகிறது என்றால் இந்த புதிய முறையும் சாத்தியப்படும்.

2. எல்லா அமைப்புகளுமே ஜனநாயகத்துக்கு உட்பட்டவையே.

கனவு 1 இல் கூறியது போன்ற ஒரு நாடாளுமன்றம் இருந்தால் அது கீழ்வரும் கனவுச்சட்டத்தை அமல்படுத்தலாம்.

"ஜனநாயக சமூகத்தில் எல்லா அமைப்புகளுமே ஜனநாயக முறையில் நடத்தப்படவேண்டும். ஒரு அமைப்பு - அது அரசியல் கட்சியோ, அறக்கட்டளையோ, தனியார் அமைப்போ, பள்ளியோ, மத நிறுவனமோ,

பத்திரிகையோ - தன்னளவில் ஜனநாயக ரீதியாக இயங்குவது அதன் சட்டபூர்வ கடமை. அந்த அமைப்புகளின் இயங்கும் விதிகள் முன்னேற்பாடாகவே ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவேண்டும். அது மீறப்படும்போது, அந்த அமைப்பு சட்டத்தை மீறுவதாகிறது".

எடுத்துக்காட்டுடன் விளக்குவோம். நாம் அனைவரும் விதிவிலக்கின்றி வெறுக்கும் ஒரு விஷயம் வாரிசு அரசியல்.

இதை சட்டரீதியாக நாம் தவிர்க்கமுடியும். முதலாவதாக, நியாயமான முறையில் அமைப்பு தேர்தல்களை வெளி கண்காணிப்பு அமைப்புகளின் மேற்பார்வையில் நடத்துதல். இரண்டாவது, ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் தலைவராக இருக்கக்கூடாது, அவரது நேர்வாரிசுகள் அதே அமைப்பின் தலைவராக அல்லது முக்கியப் பொறுப்பில் வரக்கூடாது என்பது போல சில கட்டாயங்களை சட்டமாக்கலாம். அரசியல் கட்சிகள் ஜனநாயகமாகாமல் அரசியல் வெளி ஜனநாயகமாகாது.

இது எப்படி சட்டமாகும்? கனவு 1 இல் கூறப்பட்டது போல, பிரதிநித்துவ அமைப்பு முறையில் நிஜமான ஜனநாயக சக்திகள் சட்டம் இயற்றுவதின் மீது நேரடி தாக்கத்தை செலுத்தும்போது மட்டுமே.

வங்கி, பல்கலைக்கழகம், ஒரு பங்கு சந்தையில் பொதுமக்களின் பங்கை வாங்குகிற ஒரு நிறுவனம், போன்றவையும் கூட இது போன்ற ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியாகவேண்டும். ஒரு தனியார் நிறுவனம் ஒரு குடும்பத்துக்கு சொந்தமாக இருக்கலாம். ஆனால் அதன் செயல்பாடுகள் பிறரையும் பாதிக்கும்போது அந்த குடும்பத்தினரின் ஏகபோக உரிமை அல்ல. ஸ்டேக்ஹோல்டர் உரிமைகள் குறித்து சட்டமியற்றவேண்டும்.

ஒரு சாதி சங்கம் நிஜமாகவே அந்த சாதிக்கு உதவும் செயல்களைத்தான் செய்கிறதா, ஒரு பத்திரிக்கை தெரிந்த தவறான தகவல்களை வெளியிடுகிறதா, ஒரு தனியார் நிறுவனம் திட்டமிட்டு ஏகபோகத்தை நிறுவ முயல்கிறதா, ஒரு மதநிறுவனம் மோசடி செய்யும் நோக்கில் ஒரு செயலை செய்கிறதா, இவை அத்தனைக்கும் சிவில் சமூகத்தில் விமர்சனத்துக்கு உள்ளாவதுடன் அவற்றை திருத்தும் அதிகாரமும் சிவில் சமூகத்தில் உறைந்திருக்கவேண்டும்.

ஆனால், திருத்தும் அதிகாரம் என்பது ஒரு அணுவளவு தவறினால் கூட பாசிசமாகப் போய்விடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது எப்போது என்றால், ஜனநாயக சக்திகளும் தொடர்ந்து விமர்சனத்துக்குள்ளாகமல் இருந்தால். துரோகம் தொடர்ந்தால்.

எல்லா அமைப்புகளிலும் ஜனநாயகம் என்ற கோட்பாடு ஒரு லட்சியக் கோட்பாடுதான். இதை 100 சதவீதம் நிறைவேற்ற முடியவே முடியாது. ஆனால், அதை நோக்கிய பயணத்தினூடே நாம் எந்த தருணத்திலும் அந்த தருணத்துக்கு முந்தைய நிலையில் உள்ளதை விட சிறப்பான ஜனநாயகத்தை அனுபவிக்கமுடியும்.

3. பன்முக இந்தியா

வரலாற்று ரீதியாக இந்தியா அதன் எல்லா அம்சங்களிலும் பன்மைத்தன்மை உடையது. முதலில் அது பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு. என்னதான் அதை தேச விரோதக் கருத்து என்று பலர் சாதிக்க நினைத்தாலும், இந்தியா என்பது பல தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒரு சூப்பர்ஸ்ட்ரக்சர் தேசம்தான். இது சோனியாவுக்கும் தெரியும், வாஜ்பாயிக்கும் தெரியும் (அவர்களது தேர்தல் கால கூட்டணிகளையும் பிரச்சார உத்திகளையும் பாருங்கள்). ஆனால் அவர்கள் வழிநடத்தும் அரசுகளுக்கு தெரியாது.

அதைப் போலே இந்திய சிவில் சமூகம் என்பதும் ஒற்றைப் படைத்தன்மை உடையது அல்ல. ஜாதி, வர்க்கம், மதம், பிராந்தியம், தொழில் என பலவகை அம்சங்கள் தனித்தனியாகவும், தங்களுடன் பல விகிதங்களுடன் கூடியும் பல நூறு சமூகப் பிரிவுகளைக் கொண்ட ஒரு பல்தள அமைப்பு கொண்டது அது. ஒரே இறையாண்மைக்குட்பட்ட ஒரு நிலப்பரப்பில் இவை அனைத்தும் இயங்குகின்றன என்ற உண்மைதான் இவற்றை இணைக்கிறது. ஐம்பது ஆண்டுகால இந்திய இறையாண்மைக் குடியரசு ஒரு மெல்லிய இழையாக இவற்றை கோத்து நிற்கிறது. சில சமூகங்கள் இன்னமும் இதில் இழைய விரும்பவில்லை என்பது கவனத்துக்குரிய விஷயம்.

சுதந்தர இந்தியா இந்த நிஜங்களை ஓரளவு அறிந்துதான் இருக்கிறது. மொழிவாரி மாநிலங்களின் உருவாக்கம், சிறுபான்மையருக்கு சிறப்பு கவனிப்புகள், இட ஒதுக்கீடு, இப்போது கூட்டணி ஆட்சிகள் என பல ஏற்பாடுகள் இங்கே கொண்டுவரப்பட்டன. ஆனால், இந்த எல்லா சிறப்பு ஏற்பாடுகளும் அடிப்படையில் ஒரு கற்பனையான மைய நீரோட்டத்துக்குள் அவர்களை இணைப்பவதற்கான, மைய நீரோட்டத்தை நோக்கி கவர்ந்து இழுப்பதற்கான நோக்கில் மட்டும் செய்யப்பட்டன. அதாவது சரியான மையநீரோட்ட அடையாளம் என்று இருக்கிறது என்றும் அவற்றை நோக்கி "மற்றவர்களை" இழுப்பதே இவற்றின் நோக்கம் என்றும் கூறப்படுகிறது. சிறுபான்மையரை அல்லது தலித்துகளை, காஷ்மீரிகளை அல்லது நாகர்களை, மையநீரோட்டத்துக்கு கொண்டுவருவதே தங்கள் பணி என்று மையநீரோட்ட சக்திகள் நினைக்கின்றன.

அதாவது சுயமான தேசிய வளர்ச்சிக்கு மாறாக, மேலிருந்து திணிக்கும் தேசிய வளர்ச்சியும், சுயமான சமூக உறவுகளுக்கு பதிலாக முரண்பாடுகளை பூசிமெழுகி வெளியே சிரித்து பசப்பும் சமூக உறவுகளும்தான் இதில் விளைந்தன. இது கூட காஷ்மீரிலோ வடகிழக்கு இந்தியாவிலோ சாத்தியப்படவில்லை.

என்ன காரணம்? ஜனநாயகம் பற்றிய தவறான புரிதல் அல்லது அதன் மீதான அலட்சியம்தான் காரணம். ஐரோப்பாவில் ஜனநாயக அரசு, ஜனநாயக அரசியல். ஜனநாயக சிவில் சமூகம் போன்றவை கிட்டத்தட்ட ஒன்றையொன்று ஒட்டியவாறு, ஒன்று இன்னொன்றை வலுப்படுத்தும் விதத்தில் அரும்பியது. இந்தியாவில் ஜனநாயகம் கூட மேலிருந்து கீழே திணிக்கப்பட்ட விஷயமாயிற்றே! அதுதான் காரணம்.

இந்தியாவின் பன்முகத்தன்மையை அரசியலமைப்புச்சட்டமும் அரசியல் அமைப்புகளும் முதலில் அங்கீகரிக்கவேண்டும். புவியியல் ரீதியாக மட்டுமல்ல, வரலாற்று ரீதியாகவும் மாநிலங்களுக்கு இடையில் உள்ள வித்தியாசங்களை ஏற்கவேண்டும். வெளிப்படையாக எல்லோருக்கும் பொது என்று தோன்றுகிற விஷயங்கள் அவ்வாறு இல்லை என்பதை புரிந்துகொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக, இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு அளிக்கும் அதே பலன்களை ஆதிவாசிகளுக்கு அளிக்காது. ஏனென்றால் இடஒதுக்கீட்டின் பலனை அனுபவிக்கும் தயார்நிலைகள் சமூகத்துக்கு சமூகம் மாறுகிறது. அப்போது ஆதிவாசிகளுக்கு பிரத்யேக நடைமுறைகள் தேவைப்படலாம்.

குறிப்பாக சுற்றுப்புறச்சூழலுக்கும் இயற்கைவளத்துக்கும் தீங்கிழைக்காத வளர்ச்சி வேண்டும் என்றால் சமூகப் பன்மைத்தன்மையை அங்கீரித்து முடிவெடுக்கும் சட்டமியற்றும் செயல்பாடுகள் வேண்டும். அரசியல் அரங்கமும் மீடியா அரங்கமும் முழுக்க முழுக்க மெஜாரிட்டேரியனிசத்தைத் தழுவிநிற்கும் இன்றைய நிலையின் இதுவும்கூட பெரிய கனவுதான்.

4. இயற்றலுக்கும் ஈட்டலுக்கும் தேசிய முன்னுரிமை

இந்தியாவின் நூற்றுக்கணக்கான எண்ணற்ற தனிநபர்கள் தொழில்முனைவோர்களாகவும் நிபுணர்களாகவும் மாறி இந்தியாவுக்கும் உலக சந்தைக்கும் தங்கள் பங்கினை ஆற்றும் நிலைவந்தால் ஒழிய இந்தியாவில் பொருளாதார முன்னேற்றம் சாத்தியமில்லை.

இந்தியாவின் அரசியல்-அதிகார-மீடியா வர்க்கங்கள் இன்று அதை சாத்தியப்படுத்தும் சக்தியைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அவர்களின் நலன் அதில் இல்லை. கிராமப்புற வேலைவாய்ப்பு, வேளாண் துறை, சிறு தொழில் போன்றவை நசிந்து போவதற்கு மேட்டுக்குடி பொருளாதார கண்ணோட்டத்தில் அவை குறித்து சட்டங்களும் விதிமுறைகளும் இயற்றப்படுவதே காரணம். மானியங்கள், சலுகைகள் எல்லாம் இந்த ஏமாற்று வேலையின் தீவிரத்தை மக்கள் உணராமல் தடுப்பதற்கான வழிமுறைகளாகவே எஞ்சி நிற்கின்றன.

பொருளாதார விவகாரங்களை வெளிப்படையாக விவாதிக்கும் அரசியல் முறை இங்கு இல்லை. உலகமயமாதல் காலகட்டத்தில் அதில் நாம் எப்படி திறம்பட பங்கேற்கமுடியும் என்று யாரும் பேசுவதில்லை. அமெரிக்க ஆதரவு அல்லது எதிர்ப்பு என்று இரு நிலைப்பாடுகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு இந்தியாவின் மையநீரோட்ட சக்திகள் தங்களுக்குள் சுவாரஸ்யமாக விவாதம் நடத்திக்கொண்டிருப்பதோடு சரி.

உலக மக்கள் தொகையில் ஆறு பில்லியன் பேரில் ஒரு பில்லியன் பேர் இந்தியர்கள். ஆனால், உலக ஏற்றுமதி சந்தையில் நமது பங்கு வெறும் 1 சதவீதம் கூட இல்லை.

இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு ஏற்பவும் உள்ளூர் நிலைக்கு ஏற்பவும் பொருள்களை உருவாக்குகிற போக்கு என்பது இங்கே இல்லை. தரம் குறைந்த உள்ளூர் தயாரிப்புகள் நிறைய உண்டு. தரம் மிக்க உள்ளூர்த் தயாரிப்புகள் சிலவே. எக்ஸ்போர்ட் குவாலிட்டி வேறு. லோக்கல் புராடெக்ட் வேறு!

வங்கிகளும் பிற அரசு அமைப்புகளும் தொழில்முனைவோர்களை பாடாய்ப் படுத்துகின்றன. இன்னொரு பக்கம் நவீன மேலாண்மைக் கோட்பாடுகளில் பழகாத தொழில்முனைவோர்களும் தொழிலபதிர்களும் பிஸினஸை குட்டிச் சுவராக்குகிறார்கள். பழைய நிலக்கிழார்களின் புதிய வடிவங்களாக இருக்கிறார்கள். உலக அளவில் என்ன, பக்கதுத்து மாநிலத்தைக் கூட அறியாத தொழில்முனைவோர்கள்தான் இந்தியாவில் அதிகம். வணிக சாதியாக இல்லாத சாதியில் பிறந்து முதல் தலைமுறை தொழில்முனைவோராக ஆகும் வாய்ப்பு லட்சத்தில் ஒருவருக்குக் கூட சாத்தியமில்லை.

இந்த லட்சணம் நீடித்தால் இந்தியாவில் வேலையின்மையை ஒழிப்பதற்கு வழியே இல்லை. தொழில்முனைதல் என்பதை தேசிய முன்னுரிமை மிக்க செயல்பாடாக அறிவித்து சரியான பிஸினஸ் சுற்றுச்சூழல் அவர்களுக்கு கிடைக்கும்படி செய்தால், இந்திய தொழில்முனைவோர்களால் மாபெரும் தொழில் சாம்ராஜ்யங்களை நிறுவமுடியும். அது லட்சக்கணக்கான பேருக்கு

வேலை வாய்ப்பு தருவதற்கு வழி வகுக்கும். அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள், இன்று சீனா என முன்னேறிய நாடுகள் அனைத்திலும் தொழில்முனைவோருக்கு சாதகமான சூழல்தான் சமூகத்தின் பெரும்பான்மையருக்கு வாழ்க்கையை உருவாக்கித் தந்தது. இந்தியாவில் அது நடக்கவேயில்லை. இது ஏதோ சில பணக்காரர்களை உருவாக்கிற விஷயம் என்ற அளவில் மட்டுமே ஜனநாயக எண்ணம் கொண்டோரும் நினைப்பதால், தொடர்ந்து தொழில்முனைவை அலட்சியப்படுத்தி வருகிறோம்.

தொழில்முனைவோருக்கு – அதாவது சமூகத்துக்காக பொருளை இயற்றவும் ஈட்டவும் கூடியவர்களுக்களுக்கான வசதிகளை உருவாக்குவதற்கு – தேசிய முன்னுரிமை என்ற கனவு நனவானால் ஒழிய, அறிவும் திறனும் சமூக மாற்றத்துக்கான வேட்கையும் கொண்டவர்கள் இந்த தொழில்முனைப்பு புரட்சியில் இறங்கினால் ஒழிய, பொருளாதார மாற்றம் வெகுமக்களுக்கு பயன்படாது.

இது நடந்தால், அடுத்த கனவு பலிப்பது எளிது.

5. வறுமை ஒழிப்பு

55 ஆண்டுகாலமாக இந்தியாவில் வறுமை ஒழிப்பு என்பது பெருங்கனவாகவே இருக்கிறது. வறுமையை ஒழிப்பதற்கு நாம் முயற்சி செய்யாமல் இல்லை. நிச்சயமாக வறுமைக் கோட்டிக்கு கீழ் இருப்போர் எண்ணிக்கை குறைந்து கொண்டேதான் வருகிறது. ஆனால், அதற்கு சற்று மேல் இருப்பவர்களுக்கும் அதற்கு கீழ் இருப்பவர்களும் இடையில் பெரிய வித்தியாசமில்லை. வாழ்க்கையின் தரம் மாறவில்லை.

பஞ்சங்கள் வராமல் நாம் தடுத்திருக்கிறோம். விளைச்சலில் தன்னிறைவு அடைந்திருக்கிறோம். சில குறிப்பிட்ட மாநிலங்களில் அடிப்படை வசதிகள் மேம்பட்டிருக்கின்றன.

ஆனாலும், வறுமை ஒழிந்தபாடில்லை. வாழ்க்கைத் தரம் எண்பது சதவீதத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நன்றாக இல்லை.

மேலே விவரித்துள்ள நான்கு கனவுகள் நனவாகும் முயற்சியில் நாம் இறங்கினால் வறுமை ஒழிப்பு என்பது சாத்தியப்படும்.

வறுமை ஒழிப்பு என்பது தனிப்பட்ட பொருளாதார நடவடிக்கையாக மட்டுமே இந்தியாவில் கருதப்படுகிறது. இது பிச்சை போடும் மனோபாவம் ஆகும். வறியவர்கள் பொருளாதார முன்னேற்றத்தின் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு, உரிய சம்பளம் அளிக்கப்பட்டு, அவர்கள் குடும்பம்

குடும்பமாக உழைப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டு, சம்பளத்திலிருந்து கொஞ்சமாவது மிச்சம்பிடித்து கல்விக்கோ மருத்துவத்துக்கோ செலவு முடிந்தால் மட்டுமே வறுமையின் பிடியிலிருந்து அவர்கள் வெளியேறமுடியும். இன்றைய கிராமப்புற பொருளாதார நடைமுறைகள் எதுவுமே இதற்கு சாதகமாக இல்லை.

இதை மறைப்பதற்காகவே வறுமை ஒழிப்புத்திட்டங்கள், வேலைக்கு உணவு போன்ற பசப்பு வேலைகள் இங்கே நடைமுறைக்கு வருகின்றன. அதையே முற்போக்கான திட்டங்கள் என்று உழைப்பவர்களின் போர்க்குரல் என்று சொல்பவர்களும் வழிமொழிகிறார்கள்.

வேளாண்மைத்துறையிலும் கிராமத் தொழில்துறையிலும் தற்போதுள்ள தேக்கநிலை இந்திய சாதிய சமூகத்தின் அடிப்படையிலான சமூக-பொருளாதாரத்தின் விளைவுதான். இதை சமூக அளவில் மட்டுமே அரசியல், சமூக அமைப்புகள் எதிர்கொள்கின்றன, பொருளாதார ரீதியில் நிஜமான மாற்று பிஸினஸ் நடவடிக்கைகளை யாரும் மேற்கொள்ளவில்லை. அப்படி யாரேனும் அதை மேற்கொண்டால் – என்.ஜி.ஒ.க்கள் அல்லது சுயஉதவிக்குழுக்கள் போல – அவை இன்னும் விதிவிலக்கானதாகவும் குறைபாடு உடையதாகவும்தான் இருக்கிறது. தலித் அரசியல் இருக்கிறது, தலித் இலக்கியம் இருக்கிறது, தலித் பொருளதாரம் இருக்கிறதா?

உலகளாவிய, தேசிய, மாநில பொருளாதாரத்தில் தங்களுடைய இடத்துக்காக போராடியே ஆகவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கும் கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்புக்கு புதிய பிஸினஸ் நடைமுறைகள் பல சரியான தீர்வுகளை தரும். எனவே, அனைத்து மக்களின் பொருளாதார உரிமைகள் என்பதன் அடிப்படையில் சட்டபூர்வமாகவும் பொதுநிலையிலும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம்.

அப்படி பேச ஆரம்பிப்போம் என்றால், வறுமை ஒழிப்பு அசாத்தியம் அல்ல என்பதைப் புரிந்து கொள்வோம். நம்புங்கள், வறுமையை ஒழிக்கமுடியும். ப்பூ!

என்ன செய்யவேண்டும்? முதலில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரிலும் கிராமப்புற வேலைவாய்ப்பு என்ற பெயரிலும் அளிக்கப்படும் அயோக்கியத்தனமான திட்டங்களை மறுபரிசீலனை செய்யவேண்டும். கமிஷன் ஏஜென்ட்டுகள் மற்றும் கந்துவட்டியின் பிடியிலுள்ள கிராமப்புற பொருளாதாரத்தை முழுமையான மார்க்கெட் சந்தையாக மாற்றுவதற்கு உரிய வழிவகை செய்யேவண்டும். நிஜமான சுதந்தர சந்தையை உருவாக்கி பாதுகாப்பான முறையில் மாநில, தேசிய, சர்வதேசிய மார்க்கெட்டோடு அது இணைக்கப்பட வேண்டும். அது என்ன பாதுகாப்பான முறையில்? மார்க்கெட்

ஏற்றத்தாழ்வுகளை சமாளிக்கத்தான் விவசாயிகளுக்கு நிதி, சந்தை வசதிகள் என சில பாதுகாப்பு தேவைப்படுகிறது. சந்தையின் பிரச்னைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அல்ல. சந்தையின் பிரச்னைகளுக்கு முகம் கொடுத்த முடியாவிட்டால் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியாது. பாதுகாப்பான முறையில் அந்த மாற்றத்தை நடத்துவதற்குத் தான் அரசு தலையிட வேண்டும். பாதுகாப்பு என்பதை சிறைப்பாதுகாப்பாக மாற்றும் கதைதான் இதுவரை நடந்துவந்தது.

இன்று விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம் உள்ளிட்ட எல்லா வசதிகளும் நகர்ப்புற மக்களுக்குத்தான் பயன்படுகிறதே ஒழிய கிராமப்புற மக்களுக்கு இல்லை. ஒரு வேளை எல்லாவித மானியங்களும் ரத்து செய்துவிட்டால், விளைபொருள்களின் விலை உயருமே என்று நீங்கள் அச்சப்படலாம். உயரட்டுமே! ரேஷன் கார்டு தேவைப்படாத எந்த வர்க்கத்தினரும் விளைபொருள்களுக்கு முழு விலை கொடுத்து வாங்கட்டுமே! ஏன் விவசாயி அடிமாட்டு விலைக்கு தங்கள் விளைபொருள்களை விற்கவேண்டும்? சந்தையில் ரூ.15 க்கு ஒரு கிலோ அரிசி கிடைப்பகதற்காக எதற்கு ஒரு விவசாயி மனைவி தாலியறுக்க வேண்டும்? விவசாயத் தொழிலாளி தூக்கில் தொங்கவேண்டும்? அவர்கள் எந்த வித சந்தோஷமான வாழ்க்கையையும் வாழ, அடுத்த தலைமுறையை நன்கு படிக்கவைத்து முன்னேற்ற முடியாமல் போகவேண்டும்? விவசாயிகள் தாங்கள் செய்த செலவுக்கு ஏற்ப தங்கள் பொருள்களுக்கு விலை நிர்ணயிக்க வேண்டும். அதனால் அரிசியின் விலை கிலோவுக்கு ரூ.50 ஆனால் ஆகட்டும். நகர்ப்புறவாசிகள் இந்த அரிசியை விலை கொடுத்து வாங்கமுடியாவிட்டால், கேபிள் டிவியையே சாப்பிடட்டும். நிஜமாகவே பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்று திட்டங்களை அமல்படுத்தலாமே தவிர, அதற்காக விவசாயியின் வாழ்க்கையில் மண்ணை ஏன் போடவேண்டும்?

அந்த விவசாயிகளும் உள்ளூர் சந்தை, மாநில சந்தை, தேசிய சந்தை, சர்வதேசிய சந்தை, இவற்றில் நேரடி உணவுப்பொருள் விற்பனை அல்லது மறைமுகமாக உணவுப்பதனப்பொருள் விற்பனை என பலவித சந்தை முறைகளில் அவற்றை விற்க திட்டமிடவேண்டும். எதில் அதிக லாபமோ அங்கு விற்க வேண்டும். பண்ட சந்தையில் அவர்கள் நேரடியாக பங்கெடுக்க வேண்டும். நவீன முறைகளை விவசாயத்தில் புகுத்த அரசாங்கங்களின் உதவியை மட்டும் நாடாமல் சொந்தமாகவே வாங்கும் வசதி அவர்களுக்கு அப்போதுதான் வரும். ஒட்டு மொத்த இந்திய கிராமப்புறமும் புதிய நிதி மற்றும் சந்தை மேலாண்மை கோட்பாட்டு புரட்சியால் சூழப்படவேண்டும். அதை விட்டுவிட்டு இப்போது நடைமுறையில் கொண்டுவரப்படும் பெரும்பாலான திட்டங்கள் வெறும் ஏமாற்றுத்திட்டங்கள். அந்த பலனை அனுபவிப்பவர்கள் ஏதோ அரசியல்வாதிகள் மட்டுமல்ல, விவசாயத்துறையை

சாராத எல்லா மக்களும்தான். அதனால்தான் விவசாயத் துறை கேலிக்குரியதாவும் மாறியிருக்கிறது.

அடுத்ததாக, வறுமை ஒழிப்புக்கு தேவையான மிகமுக்கியமான வாய்ப்பு மாடர்ன் ரீடெயிலிங் துறை. இது விவசாய துறைக்கு அடுத்து மிக முக்கியமான, மிகப் பெரிய துறை. பிற எந்த துறையின் வளர்ச்சியையும் பாதிக்கக்கூடிய இந்த துறை பிரமாண்டமான வேலை வாய்ப்பு துறை.

நவீன ரீடெயிலிங் சிறுவியாபாரிகளை ஒழித்துக்கட்டும் சதி என பலர் நினைக்கிறார்கள். உண்மைதான். அதை அதன் போக்கிலேயே விட்டுவிட்டால், அது சிறுவியாபாரிகளை காவு கொள்வது உறுதி. ஆனால், நவீன ரீடெயிலிங் சிறு முதலீட்டாளர்களின் - எனவே, சிறு, நடுத்தர நிறுவனங்களில் பணியாற்றும் கோடிக்கணக்கான ஊழியர்களின் - வாழ்க்கையில் ஒளியேற்றக்கூடியதும் ஆகும். அதை நம்போக்கில் கட்டுப்படுத்த முடிந்தால்.

இன்று சாதிய அடிப்படையிலான கார்ட்டெல்கள் போல செயல்படும் வர்த்தக சூழலில் ஒரு புதிய தொழில்நிறுவனம் நுழைந்து வெற்றிபெறுவது என்பது அசாத்தியமாக இருக்கிறது. சட்டவிரோதமான அல்லது அநியாயமான பிஸினஸ் நடைமுறைகள் மட்டும் இந்த துறையின் விதிகளாக இருக்கின்றன. லட்சக் கணக்கான முதல்-தலைமுறை தொழில்முனைவோர்களின் கனவுகளை நசுக்கிய கொடூர உலகம்தான் இந்த வர்த்தக உலகம். இங்கே செல்லுபடியாகிற விதிகள் இரண்டே இரண்டு: ஒன்று சாதி, இன்னொன்று நுகர்வோரின் வயிற்றில் அடித்து வியாபாரிக்கு மட்டும் லாபம் சேர்க்கும் உத்தி. இந்த வர்த்தகத்துறையினர் முறையாக வரி கட்டுவதில்லை, நுகர்வோர் நலனையும் பாதுகாப்பதில்லை, எந்த சட்டங்களையும் மதிப்பதில்லை. இவர்கள் நல்ல வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதில்லை. மிகக் குறைந்த சம்பளத்தில் கொத்தடிமைகளை மட்டுமே இவர்கள் வேலைக்கு வைத்திருக்கிறார்கள். ஜாதியும் ஊர் உறவுகளும் இந்த வர்க்கத்தின் சுரண்டலுக்கு உதவி புரிகின்றன.

நவீன ரீடெயிலிங் முறைகளிலும் இந்த கொடூரமான முறை தொடரக்கூடும். ஆனால், அந்த முறையை முறித்து மாற்று முறையைக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகளும் நவீன ரீடெயிலிங்கில் உள்ளன. இந்தியாவில் கோடிக்கணக்கான புதுவகை வேலைவாய்ப்புகளை உருவாக்க ஒரு செயின் ரியாக்ஷனை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பை உடைய ஒரே துறை ரீடெயிலிங்தான். விவசாயத்துக்கு அடுத்தபடியாக, பட்டப்படிப்புகள் தேவையில்லாமல் வேலைக்கு போகமுடிகிற ஒரே நவீன துறை இது மட்டும்தான். உற்பத்தி, விநியோகம், ரீடெயில் சேவைகள், ஏற்றுமதி என பரந்து விரியும் இந்த துறையின் மதிபபுச் சங்கிலி நெடுக மாற்று முறைகளை உருவாக்கமுடியும், உருவாக்க வேண்டும்.

லட்சக்கணக்கான சிறுதொழில் நிறுவனங்களுக்கும் மறுவாழ்வு கிடைக்க இதுவே பெரிய வாய்ப்பும் ஆகும். ரீடெய்ல் என்றாலே எம்என்சி தயாரிப்புகளுக்கு மட்டும் என்று நினைப்பவர்கள் விவரம் அறியாதவர்கள். இவர்கள் வெறும் ஸ்பென்ஸர் பிளாசாவை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். எல்லா அன்றாடத் தேவைகளுக்குமான தயாரிப்புக்கான பின்புலத்தில் பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து சுயஉதவி குழுக்கள் வரை பலரும் பங்கேற்கக்கூடிய வாய்ப்பு நவீன ரீடெயிலிங்கில் மட்டுமே உள்ளது. ஒரு கிரானா ஸ்டோரில் தங்கள் பொருள்களை விற்க முடியாமல் போகும் ஒரு இளம் தொழிலதிபர் ஒரு ஸ்பெஷாலிட்டி ஸ்டோரில் அந்த பொருளையே நல்ல விலைக்கு விற்கமுடியும். பெரிய ஷாப்பிங்மால்களில் இடத்துக்கு பஞ்சமில்லை.

இப்போது இந்த துறை வளர்வதற்கு பெரிய தடையாக இருப்பது ஒரு பக்கம் மிகப்பெரிய ரீடெயில் பகாசூரர்கள் (போட்டி வரக்கூடாது), இன்னொரு பக்கம் சிறு கடைக்காரர்கள் அழிந்துவிடுவார்களே என்று கவலைபடுபவர்கள். இவர்களுக்கு நுகர்வோர்களைப்பற்றியும் கவலையில்லை, வேலை வாய்ப்பு பற்றியோ மதிப்பு சங்கிலி முழுவதும் உருவாகிற தொழில் வாய்ப்புகள் பற்றியோ கவலைப்படுவதில்லை.

ஆனால், இந்திய சமூகத்தின் பிற்போக்கு பொருளாதார சூழலை ஒழிக்கவிரும்பும் ஒருவர் முதலிடம் தருகிற துறையாக ஆர்கனைஸ்டு ரீடெயிலிங்தான் இருக்கும்.

எந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலும் இந்தியாவில் ஒரு இயக்கம் ஆரம்பித்திருக்கலாம். அரசியல்வாதிகள் என்பவர்கள் காங்கிரஸ், திராவிட இயக்கத்தவர்கள், அம்பேத்கரியவாதிகள், மார்க்சிஸ்ட்கள், லோகியாவாதிகள், என பல்வேறு முகாம்களிலிருந்து வந்தவர்களாக இருக்கலாம். இவர்கள் அத்தனை பேருமே அடிப்படை வசதிகள் குறித்த விஷயத்தில் அரசின் தலையீட்டை ஆதரிப்பவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இவர்களின் ஆதார பலமாக விளங்கும் ஆதரவாளர்கள் (வாக்காளர்கள் அல்ல) நகர்ப்புற ஏழைகளோ அல்லது கிராமப்புறத்தினரோ அல்ல. எனவே, அவர்களுக்காக இந்த இயக்கத்தினரின் இன்றைய சந்ததியினர் செய்வது மேம்பூச்சு நடவடிக்கைகள் மட்டுமே. ஜனமயக்கு திட்டங்களையே வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் நடைமுறைப்படுத்துகிறார்கள். ஆனால், முழுமையாக கவனிக்க வேண்டிய கல்வித்துறை, உடல்நலத்துறை, வீட்டுவசதி போனற துறைகளை அம்போ என்று விட்டுவிடுவார்கள்.

வறுமை ஒழிப்புக்கும் அடிப்படை வசதிகள் பெருக்கத்துக்கும் சாதகமாக, நிலைபெறு வளர்ச்சிக்கு (sustainable development) குந்தகம் விளைவிக்காத

வகையில், தொழிலுற்பத்தி துறையில் உள்ளூர் மற்றும் அந்நிய மூலதனத்தை முடுக்கிவிடவேண்டும். அதிர்ஷ்டவசமாக Made in India லேபிளுக்கு உலகில் இப்போது நல்ல பெயர் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. இதை உறுதிப்படுத்திக்கொண்டால், சில கோடி குடும்பங்களில் விளக்கு ஏற்றலாம்.

இறுதியாக,

மேலே விவரிக்கப்பட்ட எல்லா கனவுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. கிட்டத்தட்ட ஒன்றிலிருந்து ஒன்றாக கிளைப்பவை.

எல்லாவற்றுக்கும் அடிப்படை, பிரதிநிதித்துவ முறையில் இருப்பதாகவே தோன்றுகிறது. சரியான மக்கள் பிரதிநிதித்துவம் சரியான சட்டங்களை இயற்ற வழிகாட்டும். அமைப்புகள் ஜனநாயகப்படுத்தப்படுவதை உறுதி செய்தால் சரியான சட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். அது, பன்முக இந்தியாவின் பண்புகளை சாதகமாக பயன்படுத்துவதில் முடியும். அது, இந்தியாவில் தொழில்முனைவோர்களின் புரட்சியை உருவாக்கும். அது, கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் ஒரு செயின் ரியாக்ஷனை உருவாக்கும். வறுமை ஒழிப்புக்கு உருப்படியான நடவடிக்கையாகவும் அமையும்.

ஜனநாயகம்தான் வறுமை ஒழிப்புக்கும் ஊழலுக்கும் எதிரான மிக பெரிய ஆயுதம். அதை நாம் பயன்படுத்திப் பார்ப்பதில்லை. அவ்வளவே.

நம்பிக்கையின் ஆதாரம் நம்பிக்கையேதான்

பீகோ ஐயர்

புத்தகம் - வீடியோ நைட் இன் காத்மண்டு

ரங்கூனிலிருந்து மாண்டலே வரையில் இரவு ரயிலில் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்துவிட்டுக் கீழே இறங்கியபோதுதான் மாந்மாங்கை முதன் முதலில் சந்தித்தேன். ரயில் நிலையத்திற்கு வெளியே தன் சைக்கிள் ரிக்ஷாவுடன் யாராவது சுற்றுலாப்

பயணிகள் வரமாட்டார்களா என்று பார்த்துக்கொண்டு காத்திருந்தான். சுமாராக இருபத்து சொச்சம் வயதிருக்கலாம். ஒல்லியாக, மாலுமிகளின் தொப்பியை அணிந்துகொண்டு, தாடி, கிழிந்த வெள்ளைச் சட்டை, லுங்கி, வறண்ட முகம் சகிதம் - சுருக்கமாகச் சொன்னால் ஒரு பேட்டை ரௌடிப் போல - நின்றுகொண்டிருந்தான். அவனருகில் அவனது சைக்கிள் ரிக்ஷா. பக்கங்களில் ஒரு இடத்தில் என் வாழ்க்கை (My Life) என்றும் இன்னொரு பக்கத்தில் B. Sc., (Maths) என்றும் வண்ணங்களில் எழுதியிருந்தது.

கொஞ்ச நேரம் இருவரும் கிரயத்தைப் பேரம் செய்தோம். பின்னர் மாங் மாங் ஒரு சிரிப்புடன் எக்கச்சக்க ரேட்டுக்கு என்னை ஒத்துக்கொள்ள வைத்துவிட்டான். இரண்டுபேருமாக மாண்டலேயின் அரசர்கள் வாழ்ந்த அகலமான வீதிகளில் சவாரியை ஆரம்பித்தோம். ஆரம்பம் வழக்கமான சம்பாஷணையில் சென்றது - எந்த ஊர், வயது, படிப்பு, திருமணம் ஆகிவிட்டதா - போன்ற வழக்கமான விவரங்கள். அவ்வப்போது ஏதோ கிண்டலடித்துக்கொண்டு எங்கள் பயணம் தொடர்ந்தது. விரைவில் கலகலவென்று நன்றாகப் பேச ஆரம்பித்தோம். திடீரென்று மாங் மாங் ஒரு கையால் ஓட்டிக்கொண்டே மறு கையால் தன் பாக்கெட்டில் கைவிட்டு எதையோ எடுத்தான். அது ஜேட்டில் செய்யப்பட்ட ஒரு பொருள். என்னிடம் அதை நீட்டினான். நானும் அதை வாங்கிப்ப்பார்த்து ரசித்துவிட்டு, அவனிடமே திருப்பிக் கொடுத்தேன். ஆனால் அவன் வாங்க மறுத்தான். " வேண்டாம்; இது உங்களுக்கு என் பரிசு." என்றான்.

எனக்குத் திகைப்பு. என்ன இது; இதன் சூக்ஷ்மம் என்ன என்று யோசித்தேன். அருமையாக பேசி, பரிசுக் கொடுத்து மயக்கி என்னைக் கவரப் பார்க்கிரானா? எதற்கு? என்னிடம் பின்பு ஏதேனும் திருடவா? அவனுக்கு உண்மையில் என்னதான் வேண்டும் என்னிடமிருந்து?

மாங் மாங் தொடர்ந்தான். " என்னை நினைவில் வைத்துக்கொள்ளும்படியாக உங்களுக்கு ஏதேனும் கொடுக்க நினைத்தேன். தவிர, மாண்டலே பற்றி உங்களுக்கு இனிய நினைவுகள் இருக்கும்." என்றான். எனக்கு என்ன பதில் கூறுவது என்று புரியவில்லை. " அதுலே பாருங்க" அவன் தொடர்ந்தான் " நான் பிறரை நேசித்தால் அவர்களும் என்னை நேசிப்பார்கள். இது ஒரு நியூடன் தியரி போல அல்லது ஆர்க்கிமிடைஸ் தியரி போல என்று வையுங்களேன்" என்றான்.
என க்கு இன்னும் ஆச்சரியம். இவனிடமிருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை. " எனக்குத் தோன்றுகிறது, " அவன் மேலும் தொடர்ந்தான், " வாழ்க்கையில் எப்போதும் பௌதிகத் தியரிகளைப் பின்பற்றுவது நல்லது."

எனக்கு அதில் ஒன்றும் சந்தேகமில்லை. ஆனாலும் இவன் அதை சொல்வது எனக்கு அதிர்ச்சி. " நீ பள்ளியில் பௌதிகம் படித்திருக்கிறாயா"
" இல்லை. ஆனால் நான் பௌதீகம் படித்தது கல்லூரியில். மாண்டலே பல்கலைக்கழகத்திலிருந்து கணக்கில் நான் பி எஸ்ஸி பட்டம் வாங்கியிருக்கிறேனாக்கும்" என்று பெருமையாகக் கையை ஆட்டிக்கொண்டு சொன்னான்.

" படிப்பை முடித்தாயா?" என்று வினவினேன்.

" ஆமாம். பி. எஸ்ஸி கணக்கு. "

" அப்படியா? பின் ஏன் இப்படி ரிக்ஷா வேலை செய்கிறாய்?"

" மற்ற வேலைகள் இன்னும் கஷ்டம். இங்கே பர்மாவில் ஒரு ஆசிரியருக்கு மாதச் சமபளம் வெறும் 250 கியாட்($30). மேனேஜிங் டைரக்டர் என்றால் 1000 கியாட் ($125). அட பிரஸிடெண்ட் கூட 4000 கியாட் தான் ($500). எனக்கும் பெரிய சம்பாதியம் இல்லை. ஆனால் இந்த வேலையில் நிறைய சுற்றுலாப் பயணிகளைச் சந்திக்கிரேன். என் ஆங்கிலம் விருத்தியாகிறது. என்ன இருந்தாலும் அனுபவம் என்பது ஒரு சிறந்த குரு இல்லையா?"

" ஆனாலும் நீ குதிரை வண்டி ஓட்டினால் இன்னும் அதிகம் பணம் கிடைக்குமில்லையா?"

" நான் புத்த மதத்தைப் பின்பற்றுகிறேன். சைக்கிள் பெடலை மெள்ள மிதித்தவாறு அவன் மென்மையாகத் தொடர்ந்தான். " எந்தப் பிராணிக்கும் துன்பம் விளைவிக்க எனக்கு இஷ்டம் இல்லை. ஒரு குதிரையை இந்த ஜென்பத்தில் நான் அடித்தால் அடுத்தப் பிறவியில் நானும் ஒரு குதிரையாக பிறப்பேன். "

" ஆனால் சுற்றுல்லாப்ப்யணிகளை மட்டும் துன்புறுத்தலாமாக்கும்" என்று நான் அவனைச் சற்றுக் கிண்டல் செய்தேன்.

" அதுசரி".. என்று என்னைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தான். ஹ்ம். என் கிண்டல் அவனுக்குப் புரியவில்லை போலிருக்கு. " இரண்டு வருடம் முன்பு வரையில் - நான் என் கிராமத்தில் இருந்தவரையில் - ஒருச் சுற்றுலாப் பயணியைக் கூட பார்த்தது இல்லை.

" பார்த்ததேயில்லையா?"

" சினிமாவில் மட்டுமே" என்று மறுபடி சிரித்தான். எனக்கு இன்னும் அவனைப் புரியவில்லை. ஒரு பட்டதாரி எபப்டி இபப்டி ஒரு சாதாரண வேலையில் திருப்தி படுகிறான்? அப்போது தன் சைக்கிள் ஹேண்டில் பாரில் மாட்டியிருந்த கூடையிலிருந்து ஒரு தடித்த தோலுறை மாட்டிய புத்தகத்தை என் கையில் கொடுத்துப் படிக்கச் சொன்னான். நானும் அதிகம் ஆர்வமில்லாமல் பக்கங்களைப் புரட்டினேன் - ஏதாவது அசிங்கமாகப் படங்கள் இருக்கும் என்ற எண்ணத்தில். ஆனால் உள்ளேயிருந்தது கருப்பு வெள்ளைப் புகைப்படங்கள். என் தலைமை ஆசிரியர்; என் சகோதர சகோதரிகள்; என் குரு; என் நண்பனின் சினேகிதி ; என்று வரிசையாக் அழகாகத் தலைப்பு எழுதப்ப்ட்டு. நண்பனின் சினேகிதி? சரி. இவன் சினேகிதியின் படம் எங்கே? " அவள் என்ன விரும்புவதை நிறுத்திவிட்டு வேறொருவரை விரும்ப ஆரம்பித்தவுடன் அவள் போட்டோவைக் கிழித்துப் போட்டுவிட்டேன்."

அந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் ஆங்கிலத்தில் அவனது வாழ்க்கையின் கொள்கைகளை அழகாக எழுதிவைத்திருந்தான்.

1. வன்முறையில் ஈடுபடமாட்டேன்.

2. தகாத உடலுறவுகளில் ஈடுபடமாட்டேன்
3. போதைத் தரும் எதையும் அருந்தமாட்டேன்
4. என்றும் பிறருக்கு உதவியாக இருப்பேன்
5. என்றும் அன்பாக இருப்பேன்.

" இவற்றைக் கடைப்பிடிப்பது ரொம்பக் கடினமாக இருக்குமே?" நான் உணர்ச்சியில்லாமல் சொன்னேன்

" ஆமாங்க. ரொம்பக் கடினம்தான். ஆனாலும் முயலுவேன். என் குரு சொல்வார். யாராவது உணவுக் கேட்டால், பணம் கொடு. யாராவது சூதாட்டம் விளையாடப் பணம் கேட்டால் கொடுக்காதே என்பார். யாரையும் - நம்மைக் காயபப்டுத்தியவர்களைக் கூட - எப்போதும் மன்னிக்க வேண்டும் என்றும் என் குரு சொல்வார். கைப்பந்தில் காற்றடித்தால்தான் சுவற்றில் போய் இடித்துத் திரும்பி உன்னிடம் வரும். அதில் வெற்றிடமாக இருந்தால் என்ன ஆகும்? சுவற்றில் இடித்து கீழே விழும்.

நம்பிக்கையின் ஆதாரம் நம்பிக்கையேதான்.